Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி 17 | செவ்வாய்க்கிழமை (02.08.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 226

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

## போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து

# அரசின் புதிய யோசனைகள் விடுதலைப் புலிகளால் ஏற்பு!

## பதில் கடிதமும் அனுப்பிவைப்பு

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிப் போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக் குறித்து அரசு முன்வைத்த மேலதிக யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் சாதகமான பதில் அளித்துள்ளனர்.**

**இது தொடர்பான பதில் கடந்த சனிக்கிழமை அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பதிலில் என்ன தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.**

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியின் ஊடான தங்களது பாதுகாப்பான போக்குவரத்துக் குறித்து அரச தரப்பு முன்வைத்த மேலதிக யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் சாதகமாக பதில் அளித்து இருப்பதாகத் தெரியவருகிறது.

புலிகளின் நிபந்தனையும் அரச தரப்பின் நிராகரிப்பும் இவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்த இது தரப்பையும் சமாளிக்கும் முயற்சியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஈடுபட்டது.

இந்த நிலையில் அரச தரப்புடனும், படைத்தரப்புடனும் அடுத்தடுத்து இருதடவைகள் சந்தித்த கண்காணிப்புக்குழு அரசிடம் இருந்து இது தொடர்பாக மேலதிக யோசனை ஒன்றைப் பெற்று கடந்த திங்கட்கிழமை புலிகளுக்கு அனுப்பிவைத்தது. எனினும் இந்த மேலதிக யோசனையின் உள்ளடக்கம் குறித்து அரச தரப்போ புலிகளோ எதனையும் தெரிவிக்கவில்லை.

புலிகளின் போக்குவரத்தின்போது அவர்கள் பயணம்செய்யும் பஸ்களில் படையினரும் பயணம் செய்து தங்களின் பாதுகாப்பினை அரசு உறுதிப்படுத்தவேண்டுமென புலிகள் வற்புறுத்தியிருந்தனர். இந்த நிலையில் புலிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கட்சிஉறுப்பினர்கள் 25 பேருக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 25 பேருக்கு எதிராகக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக லஞ்ச ஊழல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக பிரபல அரசியல்வாதிகள் பலரிடம் ஏற்கனவே விசாரணகள் மேற்கொள்ளப்பட்டிப்பதாகவும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அது தவிர பொலிஸார் மற்றும் முப்படைகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு, தற்போது விசாரணை செய்யும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்து 361 ஆக அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளது. (ச)

## பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு 9.5 மில்லியன் செலவில் ஆடம்பரக் கார்

(கொழும்பு)

தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ள பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தனது அமைச்சுக்களைப் பொறுப்பேற்றவுடன் முதல்வேலையாக வெளிநாடு ஒன்றிலிருந்து 9.5 மில்லியன் செலவில் ஆடம்பரக் கார் ஒன்றை கொள்வனவு செய்துள்ளார்.

அமைச்சுகளை பொறுப்பேற்றவுடன் தனது அலுவலக உபயோகத்திற்காக மேற்படி காரை கொள்வனவு செய்வதற்கு திறைசேரியிடம் கோரியிருந்தார். அதனையடுத்து அனுமதியும் வழங்கப்பட்டது.

தொழில் தொடர்புகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சின் 918 ஆவது இலக்க வரைபின் அடிப்படையிலேயே மேற்படி கார் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. தொழில் தொடர்புகள் அமைச்சின் உயர் அதிகாரியுடன் தொடர்புகொண்டபோது திறைசேரி 9.5 மில்லியனுக்கான அனுமதி வழங்கியதை உறுதிப்படுத்தினார். (12 ஆம் பக்கம்

## போர்நிறுத்த ஒப்பந்த வழக்கில் புதிய பிரதிவாதிகள் நியமனம்

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்பாட்டை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரதிவாதிகளாக தற்போதைய அமைச்சரவையின் புதிய மூன்று அமைச்சர்களைக் குறிப்பிட மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜாதிக சிங்கள சங்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி மட்டு.வில் இன்று எழுச்சி மாநாடு

(மட்டக்களப்பு)

தமிழினத்தின் விடுதலைக்கான அவசியத்தினை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்கும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய நிலை தொடர்பாகவும், சமாதானத்தின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்படவுள்ளது. அத்துடன் இதனை வலியுறுத்திப் பிரகடனம் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ மக்கள் தங் கள் பாரம்பரிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## மதுபானக்கடை மீது கைக்குண்டு வீச்சு ஊழியர் ஒருவர் மரணம்; கடை சேதம்

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு சின்ன ஊறணியிலுள்ள மதுபான நிலையம் ஒன்றின் மீது நேற்று மாலை 3.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் சாராயக் கடையில் பணியாற்றிய பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் கடையும் சேதமடைந்தது. மட்டக்களப்பு கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சிவகுமார் (வயது 30) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மதுபானக் கடைக்குச் செல்வதுபோன்று மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மதுபானக் கடையை நோக்கி கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (ச-8)

## கடத்தப்பட்ட கப்பல் கப்டனை மீட்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சோமாலியா கடற்பரப்பில் வைத்து கடத்தப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கப்பல் தலைவர் மகாலிங்கத்தை விடுவிக்கும் நடவடிக்கைகளை இலங்கை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில்;

இவ்விடயம் தொடர்பாக இலங்கைக்கான கென்யத் தூதுவர் சோமாலியாவின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட கப்பல் தலைவர் மகாலிங்கம் மற்றும் மாலுமிகளை மீட்கும் பணி குறித்து நடவடிக்கைகள் தொடர்கின்றன. இலங்கைக்கான கென்யத் தூதுவர் மகாலிங்கத்துடன் தொடர்புகொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. எனினும் கப்பல் நிறுவனத்தின் அதிகாரிகள் முன்னர் மகாலிங்கத்துடன் தொடர்புகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-8)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் தேசியத்துக்குப் பாதுகாப்பு இல்லை; ஆயுதங்களை எப்படி ஒப்படைக்க முடியும்?

## ஜோசப் பரராஜசிங்கம் கேள்வி

'தமிழ்த் தேசியத்திற்கு பாதுகாப்பு அற்ற சூழலில், ஐரிஸ் விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்தது போன்று விடுதலைப்புலிகளும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கோரிககை விடுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல.'

லண்டனில் உள்ள ஐரிஸ் விடுதலை இரா.ணுவம் போன்று விடுதலைப்புலிகளும ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று அரசு கோரிக்கை விடுத்திருப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமனற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஐ.பி.சி.வானொலிக்கு கருதது்த் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியத்திற்கு பாதுகாபபு அற்ற சூழலில் ஐரிஸ் விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்தது போன்று விடுதலைப் புலிகளும் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல.

காரணம் என்னவெனில, விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஆர்வமில்லாத அல்லது ஏற்றுக கொள்ள முடியாத சூழ்நிலையில் 14 நாட்கள் யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து அறிவித்தலுடன் விலகிக் கொள்ளலாம் என்று யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூட தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த மூன்று வருடங்கள் நானகு மாதங்களாக சமாதானப் பேச்சுவார்த்தை தொடரப்பட்டு ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு பிற்பாடு அது தடைப்பட்டிருக்கிறது. இடைநிறுத்தப்பட்டிருக்கிறது ஆனால் பேச்சுவார்த்தை இன்றுவரை தொடரவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் முன்னெடுத்துச்செல்லப்படவில்லை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தேசிய அழிவு என்று கூறப்படுகிற ஆழிப்பேரலையின பின்னரும்கூட மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பொதுக்கட்டமைப்பைக்கூட அரசு வழங்க முன்வராமல் அதில் கைச்சாத்திடுவதற்குக் கூட ஆறு மாதகாலம் இழுத்தடித்திருந்தது. சிறிலங்காவின் நீதித்துறை கூட அதனை தடைசெய்துளளது. இவ்வாறான ஒருவித சூழலில் எவ்வாறு விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கழே வைக்க முடியும்? என அவா கேள்வி எழுப்பினார். (து)


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்குண்டு

யாழ்.மாநகர சபைக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் சகல வசதியுடன் கூடிய வீடு உடன் விற் பனைக் குண் டு. தொ.பே.இல. 0777705419

(C/1498)


## கோப்பாயில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் பாதசாரிகள், வாகன ஓட்டிகள் ஆகியோருக்கு பலத்த சிரமத்தையும் இடையூறுகளையும் விபத்துக்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக சில இடங்களில் காலை வேளையில் கழுத்தில் தடி கட்டிய நாய்கள் மோட்டார் சைககிள், சைக்கிள் சில்லுகளின கம்பிக்குள் சிக்கி ஆபத்தை ஏற்படுத்துகின்றன. (அ-79)

## செல்வச்சந்நிதி மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாநத உற்சவம் எதிர்வரும் 5ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் வசதிகருதி வடபிராந்திய போக்குவரத்துச்சபை யாழ்.பஸ்நிலையத்திலிருந்து ஆலயத்திற்கான சேவையை நடாத்தவுள்ளது.

உற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியார்களின் நலனைக் கருத்திற்கொண்டு வல்வெட்டித்துறை நகரசபை தற்காலிக மலசல கூடங்களை அமைத்தும், நீர்த தாங்கிகளை வைத்து பவுசர்கள மூலம் குடிநீரை வழங்கவும் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக கப்படுகிறது. (அ-7)

## ஜனாதிபதி வேட்பாளருக்கு நிபந்தனைகள்

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள வேளை, பல்வேறு நிபந்தனைகளையும் ராஜபக்ஷவிற்கு விதித்துள்ளார். பண்டாரநாயக்க குடும்ப அங்கத்தவர்களுடனும் தனக்கு நம்பிக்கையானவர்களுடனும் கலந்துரையாடிய போது ஜனாதிபதி தனது நிபந்தனைகள் குறித்து வலியுறுத்திக் கூறினார்.

அந்நிபந்தனைகளில் ஜே.வி.பியுடன் எத்தகைய கூட்டணியும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதும் அடங்கும். மேலும் ராஜபக்ஷவின் கொள்கைவரைவை சுதந்திரக்கட்சியின் பிரசாரக் குழுவே வகுக்கும் என்றும் அதற்குத் தானே தலைவராக இருப்பார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு முக்கியமாக அமுல்படுத்த வேண்டுமென்பது புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதும் கொள்கை வரையறைக்குள் அடக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜே.வி.பியுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதுடன் அவர்களுடன் கூட்டணி அமைப்பது பற்றிப் பேச்சுக்கள் நடத்துவது என்பது ஜனாதிபதியாலும் கட்சியின் பொதுச்செயலாளராலும் மட்டுமே நடாத்தப்படமுடியும் என்பது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்திற்கான குழுவை ஜனாதபதி சந்திரிகாவே வழிநடத்துவார் என்பதும் கொள்கை வரைவில் அடங்கும் எனத் தெரிகிறது. (து-6)

## இராசிபலன்

**02.08.2005**

**(ஆடி 17, செவ்வாய்க்கிழமை)**

**திரீயோதசி பின்னிரவு 5.23 மணிவரை**

**திருவாதிரை பின்னிரவு 12.28 மணிவரை**

**இராகுகாலம் 3.03 - 4.33 மணிவரை**

**சுபநேரம் 10.33 -12.03 மணிவரை**

**பிரதோஷ விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, கலந்துரையாடல், ஜனவசியம். |
| இடபம் | அதிகசெலவு, கோபப்படுதல், முயற்சி தாமதம், வேலைச்சுமை, |
| மிதுனம் | நல்லமுயற்சி, உறவினர் சந்திப்பு, கற்பனை மிகுதி, தொழில்சிந்தை. |
| கடகம் | வீண்செலவு, உறவினர் வெறுப்பு, காரிய அனுகூலம், வேலைச்சுமை. |
| சிங்கம் | காரிய அனுகூலம், பெருமையடைதல், உற்சாகம், புதிய பொருள்சேர்க்கை. |
| கன்னி | பிறர் உதவி, மேன்மை, காரியசித்தி, தொழில் நன்மை. |
| துலாம் | சரீரப் பிரயாசை, புதியதிட்டமிடல், முயற்சி தாமதம், தந்தைவழி உறவு. |
| விருச்சிகம் | பிரயாணபயம், ஆரோக்கியக் குறைவு, உறவினர் வெறுப்பு, திடீர் நன்மை. |
| தனுசு | அபூர்வ சந்திப்பு, தனவரவு, காரிய அனுகூலம், சென்ற இடத்தில் செல்வாக்கு. |
| மகரம் | தொழில் நன்மை, ஆரோக்கியம், பகைவர் நேசம், முயற்சி கைகூடும். |
| கும்பம் | உடல் நலக்குறைவு, குடும்பக்கவலை, பணவிரயம், முயற்சி தாமதம். |
| மீனம் | ரோக நிலை, கல்வியில் ஆர்வம், மாதா சுகம், காரிய தாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

## தண்டப்பணப் பற்றுச்சீட்டுகள் அச்சிடப்படாமையால் சங்கடம்

(கொழும்பு)

வாகனங்களை செலுத்துவதற்கு தகுதியற்றவர்கள் என இனங்காணப்பட்ட சுமார் 4 ஆயிரம் பேர் வாகனங்களை செலுத்தி வருவதாக பொலிஸ தலைமையகம் தெரிவிக்கின்றது.

இவர்கள் வாகனங்களை செலுத்துவதற்கு தகுதியற்றவர்கள் என்பது வைத்தியர்கள் மேற்கொண்ட பரிசோதனையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் இவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருப்பதாக காமினி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இவர்களை அடையாளம் காணும் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர் இவர் களுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் திருத்தங்கள் அடங்கிய தண்டப்பணப் பற்றுச்சீட்டுக்கள் கிடைக்காமையால் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

இதற்கான பற்றுச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டு வருவதாக போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இவை கிடைக்கப் பெறும்வரை போக்குவரத்து சட்ட விதிகள் மீறியமை தொடர்பாக அடையாளம் காணப்படுவோரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த வேண்டியுள்ளதால் இந்த நடவடிக்கையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (து-9)

## தளபாடங்கள்

(கற்கோவளம்)

ஐ.ஓ.எம் நிறுவனத்தினரால் கொட்டடி சித்தி விநாயகர் பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 2.30மணியளவில் கொட்டடி நகர கடற்றொழிளாளர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் ஆ.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-104)

## சுனாமியின் போது நடந்த தெல்வத்தை ரயில் விபத்து

### நேற்று முதல் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் சுனாமி அனர்த்தத்தின்போது இடம்பெற்ற தெல்வத்தை ரயில் விபத்து பற்றிய விசாரணை நேற்று முதல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெறற மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெரேரா தலைமையில் 3 பேர் கொண்ட குழு இக் கோரச் சம்பவதின் விசாரணைக்கு நியமிக கப்பட்டிருந்தனர்.

மேற்படி கோரச் சம்பவத்தில் 1000பேர் கொல்லப்பட்டிருந்தனா. "கடலரசி" என்ற பெயருடைய ரயிலே தெல்வத்தை எனும் இடத்தில் மாத்தறை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே சுனாமி விபத்தைச் சந்தித்தது.

சுனாமி அலையில் அகப்படாமல் உயிர்களை காத்திருக்கக் கூடிய சாத்தியம் ஏதாவது இருந்ததா என்பது பற்றி விசாரணைகள் நடத்தப்படும். எதிர்காலத்தில் இவ்வாறு அனர்த்தங்கள் ஏற்படும் இடத்து இத்தகைய உயிரிழப்புக்களை தடுக்கக் கூடிய, குறைத்திருக்கக்கூடிய சாத்தியங்கள் பற்றி விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும். 3 மாதங்களுக்குள் இவ்வறிக்கை ரயில்வே அமைச்சரிடம் கையளிக்கப்படும்.இவ்விபத்து தொடர்பில் ஏதேனும் தெரிவிக்க பொலிஸார் விரும்பினால் தாராளமாக தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-6)

### உயர்கல்வி கற்றோரின் வேலையில்லாப் பிரச்சினை

## பல்கலைக்கழகம், தனியார்துறை இரண்டுக்கும் இடையே புரிந்துணர்வு இன்மையே காரணம்

நாட்டின் கல்வித்துறையில் தொழில்நுட்பம் குறித்து ஆழமாகச சிந்தித்துச் செயற்படாததன் காரணமாகவே உயர்கல்வியைப் பூர்த்திசெய்த மாணவர்கள் வேலையில்லாப் பிரச்சினைகளை எதிாநோக்கியுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கல்வியின்போது தொழில்நுடபப் பாடத்தை உரிய முறையில் கற்றுக்கொள்வார்களாயின் உற்பத்தித்துறைக்கு அது பெரும் பங்களிப்பை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுனாமி அனர்த்ததின் போது பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக பத்தேகமவில் நேற்று முன தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், அபிவிருதத்தி அடைந்த பல நாடுகள் தொழில்நுட்பக் கல்வியை முறையான விதத்தில் போதித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கையின் பல்கலைக்கழகத்திற்கும் தனியார் துறையினருக்கும் இடையே சரியான புரிந்துணர்வின்மையின் காரணமாக கல்வியைப் பூர்த்தி செயயும் இளைஞர், யுவதிகளுககு தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார். (அ-2)

ஜனாதிபதித் தேர்தல்

# முடிவு சொல்லும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கே உண்டு

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பது உரிய நடவடிக்கை அல்ல என பிரதமர்



மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை நடத்தும் தினத்தை தேர்தல் ஆணையாளரே தீர்மானிக்க வேண்டும் எனவும் பிரதமர் கூறுகின்றார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான நவலகே பேனாட் கூரேயின் 40 வருட அரசியல் வாழ்க்கையை நினைவு கூரும் விதத்தில் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துங்கள் என்று ஜனாதிபதிக்குக் கூறினால் அதில் பயனில்லை. ஏனென்றால் ஜனாதிபதித்தேர்தல் குறித்து தெளிவுபடுத்திக் கொள்ள தேர்தல் ஆணையாளர் கேட்க வேண்டிய உயர்ந்த அமைப்பு உயர் நீதிமன்றம் என அரசியலமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பில் ஏற்படும் சந்தேகங்களுக்கு கருத்துப்பெறுவதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கே உள்ளது.

இது குறித்து நாம் முன்னர் சொன்ன போது அவர்களுக்கு ஞாபகம் வந்தது. அதன் பின்னரே தேர்தல் ஆணையாளருக்கு சொன்னார்கள் ஜனாதிபதி, ஜனாதிபதித்தேர்தலை நடாத்தவேண்டும் என்று கூறியே பேரணியை நடத்தினார்கள். இது தேர்தல் ஆணையாளரினதும் உயர் நீதிமன்றத்தினதும் கடமை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற அடிப்படையில 2006ஆம் ஆண்டிலோ 2005 ஆம் ஆண்டிலோ தேர்தலை நடத்தினால் நாம் தயாராகவுள்ளோம் என ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கூறவிரும்புகின்றோம். என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-8)

## மக்களுக்குச் சேவையாற்ற எந்நேரமும் அரசியல்வாதிகள் தயாராக வேண்டும்

அரசியல் வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது சகல சந்தர்ப்பங்களிலும் [illegible] சேவையாற்ற வேண்டும் என [illegible] மகாண சபை உறுப்பினர் சாந்தினி கொங்காங்கே தெரிவித்துள்ளார். அரசியல் வாதிகள் இன ரீதியாக பிளவுபட்டு செயற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். கம்பளையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தமிழர்கள் ,சிங்களவர், முஸ்லிம்கள் என பேதமடைய முடியாது என சுட்டிக்காட்டிய அவர், அனைத்து மக்களின் உதிரங்களில் இலங்கையர் என்ற ரத்தமே பாய்வதாகக் கூறினார்.


ஒவ்வொருவரது ரத்தத்திலும் தமிழ், முஸ்லிம்,சிங்களம் என்ற வேறுபாடு இல்லை. அரசியல் வாதிகள் என்ற வகையில் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது சகல சந்தர்ப்பங்களிலும் வீடு வீடாகச் சென்று இயலாதவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் செயற்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (அ-9)













இலங்கை வங்கியின் 66ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நேற்று யாழ். பிராந்திய மேற்தரக்கிளையிலும் ஸ்ரான்லி வீதி கிளையிலும் நடைபெற்றது.

ஸ்ரான்லி வீதி கிளையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் சிவகுமார், யாழ்.பிராந்திய மேற்தரக் கிளையின் செயற்பாட்டு முகாமையாளர் அருமநாயகம், மௌலவி இர்பான், வணபிதா ரொசான், நல்லை ஆதீன முதல்வர், யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி கமலநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் வங்கி முகாமையாளர் உலகநாதன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி கமலநாதன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-ஞா. ஐங்கரன்)

# சுனாமிக்குப் பின்னர் படிப்படியாக தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் யாழ். மாவட்டத்தில் கரையோரப்பகுதி மீன்பிடித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது மாத்திரமன்றி அவர்களது தொழில் உபகரணங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் சுனாமிக்குப்பின் பெரும்பாலான மீனவர்கள் மன அச்சம் காரணமாகவும் தொழில் உபகரணங்கள் இன்மை [illegible] தொழிலுக்குச் செல்லாமல் [illegible] வருகிறார்கள்.

[illegible]போது யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவிகளை வழங்கி வருவதனால் தற்போது 40 வீதமான மீன்பிடித்தொழிலாளர்கள் மீண்டும் தொழிலுக்கு செல்ல ஆரம்பித்துள்ளார்கள் என யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும், தொடர்ந்தும் அரசசார் பற்ற நிறுவனங்களும் கடற்றொழில் திணைக்களமும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கி வருவதனால் ஏனைய 60 வீதமான மீன்பிடித் தொழிலாளர்களும் தொழிலுக்கு படிப்படியாக செல்வார்கள் எனவும் இவ் உதவிகள் யாவும் விரைவாக அவர்களைச் சென்றடையுமானால் மீன் பிடித் தொழிலாளர்கள் அனைவரும் முழுமையாகத் தொழிலுக்குத் திரும்பக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(து-19)

















யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நேற்றுக் காலை கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள் பான்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்படுவதையும், மேடையில் உள்ள விருந்தினர்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும், நிகழ்வின் தலைவரும் பழைய மாணவனுமான ந.விஜயசுந்தரம் தலைமையுரை ஆற்றுவதையும் பரிசளிப்பு அறிக்கையை கல்லூரி அதிபர் க.இராசதுரை சமர்ப்பிப்பதையும், பாடசாலையின் முன்னாள் நூலகர் க.மாணிக்கவாசகர் நிறுவுனர் தின உரை ஆற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா ரெலிக்கொம் வடபிராந்திய தலைவர் எந்திரி வீ.யோகேந்திரன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-ஞா.ஐங்கரன்)

## இன்று ஒரு தகவல்

# கர்வம்

ஒரு தீக்குச்சி தீப்பெட்டியைப் பார்த்துக் கேட்டதாம் ''நாம் இரண்டு பேரும் தானே உரசிக்கொள்கிறோம்... ஆனால் நான்-மட்டும் தீப்பிடித்து எரிந்து போகிறேன். நீ அப்படியே இருக்கிறாயே'' என்று. அதற்குத் தீப்பெட்டி சொன்னதாம் 'உனக்குத் தலையில் கனம் இருக்கிறது. அதனால் அழிந்து போகிறாய்' என்று.

எப்படி இருக்கிறது இந்தப் பதில்? தலையில் கனம் உள்ளவர்கள் யாரும் சரியாக இருக்க முடியாது. எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி கர்வம் என்பது கூடாது.

இதை விளக்குவதற்கு மகான் ஒருவர் ஒரு சம்பவத்தைச் சொல்கிறார். அருச்சுனன் தீர்த்தயாத்திரை சென்ற போது தென்னிந்தியாவுக்கும் வந்தானாம். ராமேஸ்வரத்திற்குப் போனபோது அங்கே இலங்கைக்கு கற்கள் அடுக்கிப் போடப்பட்டிருந்த பாலத்தைப் பார்த்தானாம். ஒரு சிறிய குரங்கு அதற்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு அருச்சுனன் சிரித்திருக்கிறான். ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று என்று கேட்டது அந்தக் குரங்கு. "ராமன் மிகச் சிறந்த வில் வீரன். அப்படி இருக்கும் போது அவன் இலங்கைக்கு அம்புகளாலேயே ஒரு பாலம் கட்டியிருக்கலாமே! அதைவிட்டுவிட்டு போயும் போயும் உன்னை மாதிரி குரங்குகளைத் துணையாக வைத்துக் கொண்டு இப்படி ஒரு கருங்கல் பாலத்தைக் கட்டியிருக்கிறானே'' என்றான்.

''அம்புகளால் பாலம் கட்டமுடியுமா?'' என்று கேட்டது குரங்கு. 'ஏன் முடியாது? என்னால் முடியுமே' என்றான். அருச்சுனன். ''அம்பினால் பாலம் கட்டலாம். இருந்தாலும் என்னை மாதிரி குரங்குகள் ஏறி நடந்தால்... அது தாங்குமா? அதனால் தான் ராமர் கருங்கல் பாலம் கட்டினார் போலிருக்கிறது என்றது குரங்கு. அப்படியா சொல்கிறாய்? நான்வேண்டுமானால் இப்போது அம்புகளினாலேயே ஒரு பாலம் கட்டுகிறேன். அதன் மீது நீ ஏறி நடந்து பார். பாலம் விழுந்து விட்டதென்றால் நான் தீ மூட்டி அதில் குதித்து உயிர்த்தியாகம் செய்கிறேன் என்றான் அருச்சுனன் மிகக் கோபமாக.

உடனே அந்தச் சின்னக் குரங்கு பெரிய உருவம் எடுத்து விட்டதாம். கையில் கதையுடன் அருச்சுனன் முன்னால் நிற்கிறான் அனுமன். ''பார்த்தா! என்னுடைய தலைவர் ராமனையா இழிவாகப் பேசுகிறாய்? நீ இப்போது பாலம் கட்டு! நான் எனது பலத்தை கட்டுகிறேன்'' என்றான். அனுமன் அருச்சுனன் தனது காண்டீபத்தை எடுத்து சரமாரியாக அம்புகளை விடுகிறான். அதெல்லாம் ஒன்றோடு ஒன்று கோர்த்துக் கொண்டு பாலமாக அமைந்து விட்டது. அருச்சுனன் தலைநிமிர்ந்து நின்றான்.

அனுமன் உயரே கிளம்பி... அங்கிருந்து பாலத்தில் வந்திறங்கினான். பாலம் நொறுங்விட்டது. 'என்ன அருச்சுனா இப்போது என்ன செய்யப் போகிறாய்? என்றான் ஏளனமாக. அருச்சுனன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். சொன்னபடி தீ மூட்டச் சொன்னான். அதில் குதிப்பதற்காக மூன்று முறை சுற்றிவந்தான். அப்போது அங்கே கிருஷ்ணர் தோன்றினார். என்ன அருச்சுனா என்ன நடந்தது?'' என்று கோட்டார். ஒன்றும் தெரியாத மாதிரி.

அருச்சுனன் வாயைத்திறப்பதற்கு முன்பாக அனுமன் வாயைத்திறந்து நடந்தவற்றைச் சொன்னான். அருச்சுனன் செய்த சவாலின் படி உயிர் துறந்தே ஆக வேண்டும் என்றான் அனுமன். கிருஷ்ணர் யோசித்தார். நல்லது. இங்கே சவால் விட்டதற்கும் நடந்ததற்கும் யார் சாட்சி? பெரியவர் ஒருவரை வைத்துக்கொண்டு அல்லவா இந்தப் போட்டி நடந்திருக்க வேண்டும்?'' என்றார். ''அதனால் என்ன? இப்போது மறுபடியும் இந்தப் போட்டியை நடத்தினால் சரி தானே! என்னால் அம்புப் பாலத்தை நொறுக்க முடியாதா?'' என்றான் அனுமன். அருச்சுனனும் அம்புப் பாலம் அமைத்தான். அனுமன் ஏறிக்குதித்தான். பாலம் அசைந்து கொடுக்கவில்லை. இப்போது அனுமன் தலையைக் குனிந்து கொண்டான்.

அருச்சுனன் நன்றியோடு நிமிர்ந்து பார்த்தான். கிருஷ்ணனின் தோள்களிலும் முதுகிலும் ரத்தம் என்ன சுவாமி? என்ன நடந்தது?'' என்றான் பதறிப்போய் ''உன் அம்புப் பாலத்தை நான் தான் முட்டுக் கொடுத்துத் தாங்கினேன். அனுமன் குதித்த போது... என்மேல் ஏற்பட்ட காயங்கள் இவை! பின்னே உனது அம்பு பலத்தினாலேயா பாலம் நின்றது என்று நினைக்கிறாய்?'' என்றார். முதலில் அருச்சுனன் அதன்பின் அனுமன். இருவருக்கும் கர்வபங்கம் ஆகிவிட்டதாம். அவர்களிடம் இருந்த கர்வம் போய்விட்டது. யாராக இருந்தாலும் கர்வம் கூடாது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்தக் காலத்தில் நாமெல்லாம் எந்த விடயத்திற்கும் கர்வப்பட்டுக்கொள்கிறோம்.

இரண்டு பெண்கள் தமது கணவன்மார்களைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசிக்கொண்டார்களாம். அதில் ஒருவர் "என் கண்வரிடம் எந்த விடயத்தைக் கொடுத்தாலும் அதைப் பற்றி அழகாக ஒரு மணிநேரம் பேசுவார் என்றாராம். உடனே அடுத்தவர் அது என்ன பிரமாதம்? என் கணவருக்கு விடயமே வேண்டாம் விடயமில்லாமல் நாள் முழுவதும் பேசிக்கொண்டிருப்பர்.'' என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி வேட்பாளர் நிறுத்தப்பட்டால் நட்டம் அவர்களுக்கே

## டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளரானாலும் பிரதமர் பதவிக்கான வேட்பாளரானாலும் இவை இரண்டுக்குமே தகுதிவாய்ந்தவன் நானே என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சருமான டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

அடுத்த பிரதமர் பதவிக்கு வேட்பாளராகும் எதிர்பார்ப்புடன் கட்சியில் இருந்த பலரில் நீங்களும் ஒருவர் தானே என்று அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

பிரதமாராகும் எதிர்பார்ப்புடன் பலர் இருந்திருக்கலாம். எனினும் முடிவில் யாராவது ஒருவர் தானே தெரிவுசெய்யப்படுவர். சரியாகச் சொல்வதாயின் ஜனாதிபதி வேட்பாளர் என்றாலும் பிரதமர் வேட்பாளர் என்றாலும் அதற்கு தற்போது தகுதிவாய்ந்தவன் நானே. இது பற்றி ஜனாதிபதி எனக்கு உறுதியளித்தும் உள்ளார்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை பிரதமராக்கியபோது அம்புலுவாவேயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதி என்னிடம் இந்தநேரத்தில் பிரதமராக நியமிக்கவேண்டியது உங்களைத்தான். அதற்கு தகுதியானவரும் நீங்கள்தான். ஆனால், ரட்ண சிறி விக்கிரமநாயக்க சுகவீனமுற்றிருப்பதனால் எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் உள்ளது என தெரிவித்தார்.

அப்போது நான் "பரவாயில்லை இந்த தடவை ரட்ணசிறிக்கு வழங்குங்கள் அடுத்த முறை எனக்கு வழங்குங்கள்'' என்றேன். ஆனால் இம்முறை மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டுள்ளது. நான் இந்தப் பதவிகளின் பின்னால் அலைபவன் அல்லன் என்பதால் இவற்றைப் பற்றிக் கவலைப் படவில்லை என அமைச்சர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித்தேர்தலில் ஜே.வி.பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரை ஆதரிக்கும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவர்கள் எப்படியும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க மாட்டார்கள் எனக் குறிப்பிட்ட அமைச்சர், ஜே.வி.பியினர் தனியாக ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தால் அதனால் எங்களுக்கு தற்காலிகமாக நட்டம் ஏற்படும். ஆனால் ஜே. வி.பிக்கு நிரந்தரமான நட்டம் ஏற்படும். அதனால் ஜே.வி.பி நன்கு சிந்தித்தே இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கும் என்று நம்புவதாகத் தெரிவித்தார்.

ஜே.வி.பி. ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு எதிராக கொண்டுசெல்லும் போராட்டம் வெற்றிகரமாக அமையவில்லை. அவர்களின் எதிர்ப்பினை மக்கள் பெருட்படுத்துவதில்லை. இந்த ஆர்ப்பாட்டங்கள் கொழும்புக் கோட்டையிலும் லிப்ரன் சுற்றுவட்டத்திலும் மற்றும் சில இடங்களிலும் மட்டுமே நடத்தப்படுகின்றன.

அதற்கு அப்பால் கிராமங்களில் இந்தப் போராட்டங்கள் இல்லை. கிராம மக்கள் அவற்றைப் பொருட்படுத்துவதுமில்லை. அவர்களுக்கு இவற்றை விட முக்கியமான வேறு விடங்கள் உள்ளன.

ஜனாதிபதி தனது பதவிக்காலம் முடிந்த பின்னரும் அரசியலில் இருந்து ஓய்வு பெறமாட்டார். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தலுக்கான நடவடிக்கைகளையும் அவரே மேற்கொள்வார். அவர் கட்சியின் தலைவியாக தொடர்ந்தும் இருப்பார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அரசுத்தலைவர் தேர்தலில் கதிரைச் சின்னத்தில் போட்டியிடுமா, கை சின்னத்தில் போட்டியிடுமா, அல்லது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுமா என்பது பற்றி இது வரை தீர்மானிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர் டி.எம். ஜெயரட்ண, அரசுத்தலைவர் தேர்தல் நெருங்குகையில் அது பற்றி முடிவு செய்வோம். ஜே.வி.பி மீண்டும் இணைந்து கொண்டால் வெற்றிலைச்சின்னத்தின் கீழ் போட்டியிடலாம் என்றார். (து)

# ஜேர்மன் வாசிக்கு நாட்டுப்பற்றாளர் விருது

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை மாரடைப்பால் மரணமான ஜேர்மனியைச் சேர்ந்த விஜயரட்ண கணேஸ்வரன் நாட்டுப்பற்றாளர்களாக விடுதலைப் புலிகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1985ஆம் ஆண்டிலிருந்து புலம் பெயர் மண்ணில் தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்க விடுதலைப் புலிகளின் ஜேர்மன் பணியகத்துடன் இணைந்து அதன் டுசுல்டோர்வ் நகரச் செயற்பாட்டாளராகவும் பின்னர் 1995ஆம் ஆண்டிலிருந்து டுசுல் டோர்வ் தமிழாலய நிர்வாகியாகவும் செயற்பட்டுவந்தார்.

இதனாலேயே அவருக்கு நாட்டுப் பாற்றாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. (ச)

# ஓரிரு நாட்களில் சூறாவளி வீசும்

(கொழும்பு)

வடமேல் மற்றும் மேற்குப் பகுதிகளில் இன்னும் இரண்டு வார காலப் பகுதிக்குள் சூறாவழி வீசக்கூடும் என காலநிலை அவதான மையம் தெரிவித்துள்ளது.

காலநிலை அவதான மையத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எச்.காரியவசம் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பிட்ட பிரதேசங்களில் சூறாவளி ஏற்படுவதற்கான அறிகுறிகள் அதிகமாக இருப்பதாகத் தெரிவித்தார்.

அண்மையில் புத்தளம் வியாங் கொடப் பகுதிகளில் ஏற்பட்ட சூறாவளி இதன் நடு அங்கம் எனத்தெரிவித்தார். (ச-8)

# அரசியல்வாதிகளெவரும் உள்நோக்கத்துடன் தண்டிக்கப்படக் கூடாது-ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸநாயக்கவின் அரசியல் கீர்த்தியை மழுங்கடிக்கும் வகையில் அரசாங்கமும் இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவும் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் எஸ். பி.திஸநாயக்கவை இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிரான வழக்கில் இருந்து விடுவித்துள்ளமை அவரின் செயற்பாட்டுக்கு மீண்டும் புத்துயிரை வழங்கியுள்ளது. இந்த நிலையில் அரசும் இலஞ்சம், ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவும் தமது பிழையான அணுகுமுறையை நிவிர்த்திக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1994ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியினால் இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது உள்நோக்கத்துடன் ஒரு அரசியல்வாதி வீணாகத் தண்டிக்கப்படக்கூடாது என்ற சரத்து உள்ளடக்கப்பட்டிருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

# போராளிகளுக்கு முழுப்பாதுகாப்பு பயணத்தின் போது வழங்க உத்தரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இடையே பயணம் செய்யும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு முழு அளவி லான பாதுகாப்பை வழங்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக வாரஆங்கில இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உத்தரவுக்கிணங்க கடந்த 23ஆம் திகதி திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ். எழிலனுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்து நடவடிக்கைகளின் பொழுது உரிய பாதுகாப்பு குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அரசாங்கத்துடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கும். இந்தத் தருணத்தில் இந்த செய்தி வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (து)

# தமிழகப் பயணம்

## பயணக் கட்டுரை

43 தஞ்சைப் பெருங்கோயிலை கட்டுவித்த ராஜராஜசோழன் கோபுரத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாகப் பேராசிரியர் லெனின் தெரிவித்திருந்தார்.

இது பற்றி இதற்கு முன்னைய தொடரில் எழுதியிருந்தேன்.

பெருங்கோயிலைக் கட்டுவித்த ராஜ ராஜசோழன் அதனை உருவாக்கய சிற்பியை கொலை செய்ததாகவும், அதனால் மனம் உடைந்து போய் தனது இறுதிக்காலத்தில் தான் கட்டிய கோபுரத்தில் ஏறி அதிலிருந்து குதித்து தன் உயிரை மாய்த்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்ட கருத்து வாசகர்களைக் கடுமையாக தாக்கிவிட்டது போலும்.

பேராசிரியர் லெனின் கூறியதற்கு எந்தவிதமான ஆதாரங்களும இல்லையென வாசகர்கள் பலர் கடிதம் எழுதியுள்ளனர். அவர்களின் கருத்துக்களுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

அதேநேரம் பேராசிரியர் லெனினால் கூறப்பட்ட கருத்து ஓர் வரலாற்று ரீதியானது. வரலாறுகள் எல்லாமே உண்மையானவை என்று கூறிவிடமுடியாது.

மகாவம்சத்தை உண்மையெனக் கூறி, காலம் கழித்தவர்கள் இப்போது மகாவம்சமோர் கட்டுக்கதை என்ற உண்மையை உணரத்தொடங்கியுள்ளனர்.

ஆக, வரலாறு எனப்பேசப்பட்டவை கால ஓட்டத்தில் நிராகரிக்கப்படுவதும், வரலாற்றில் இருந்து நீக்கப்பட்டவை சேர்க்கப்படுவதும் இயல்பு.

அவ்வகையில் பேராசிரியர் லெனினால் கூறப்பட்ட கருத்தானது அவரது ஆய்வியல்கண்ணோட்டத்தில் முன் வைக்கப்பட்டவை.

அவர் கூறிவிட்டார் என்பதற்காக அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது நியதியாகாது.

ஆனால் அவர் கூறுவதில் ஏதேனும் உண்மை உண்டா? என்பது பற்றிய தேடலில் ஈடுபடுவது உண்மையை துலங்க வைப்பதற்கான வழியாகும்.

### தஞ்சைப்பெருங்கோயிலில் இராஜராஜன் சிலை

இராஜ ராஜசோழன் பெருங்கோயிலின் கோபுரத்தில் ஏறி குதித்து தற்கொலை செய்துகொண்டான் என்ற செய்தியில் உண்மையுண்டோ! இல்லையோ? ஆனால் ஆட்சிப் பீடங்களில் இருப்பவர்கள் தஞ்சைப்பெருங்கோயிலுக்கு போவதை தவிர்த்துக் கொள்வார்கள் என்ற கருத்தை எம்முடன் உள்ளகப்பயிற்சிக்கு வந்திருந்த திருஜனகேஸ்வரன் தெரிவித்திருந்தார்.


தஞ்சைப் பெருங்கோயிலுக்குச் சென்று வந்தால் பதவி பறிபோய்விடும் என்ற காரணத்தினாலேயே ஆட்சிபீடங்களில் இருப்பவர்கள் அங்கு செல்வதை தவிர்த்து வந்தார்கள். எனினும் எம்.ஜி.ராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்த காலத்தில் அப்போது பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தி, ராஜராஜசோழனின் சிலையை தஞ்சைப் பெருங்கோயிலுக்குள் வைப்பதற்காக அங்கு சென்றார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அது கருதப்பட்டது. பெருங்கோயிலுக்கு இராஜராஜசோழனின் சிலையை வைத்த சிறிது காலத்திற்குள் இந்திரா காந்தி அவர்கள் இந்த உலகத்தை விட்டுப் பிரிய, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கடுமையாக நோய்வாய்ப்பட்டார்.

இந்திராகாந்தி இறந்த செய்தியை கூட அவரால் அறியமுடியாத நிலை இருந்தது.

இவை தற்செயலாக இருப்பினும் சம்பிரதாயங்களில் நம்பிக்கை உடையவர்கள் அன்னை இந்திரா காந்தியும், எம்.ஜி.ராமச்சந்திரனும் பெருங்கோயிலுக்குச் சென்றதனாலேயே அவர்களுக்கு அக்கதி ஏற்பட்டதென அந்தச்சந்தர்ப்பத்தில் பேசிக்கொண்டதும் உண்டு.

சமூகவியல் தொடர்பான சிந்தனைகளை விஞ்ஞான ரீதியில் நியாயப்படுத்த முடியாது என்பதால் அது பற்றிய விமர்சனங்கள் தேவையற்றவை என்றே கருதுகின்றேன்.



தஞ்சைப்பெருங்கோயில் வெளிச்சுற்றுமதில்.


### கலைஞரும் பயந்து விட்டார்.

சமூக நம்பிக்கைகள் தப்பானவை அவை மூடக்கொள்கைகள் என்ற வகுதிக்குள் அடக்கப்படவேண்டியவை என்றெல்லாம் கூறுபவர்கள் கூட, தத்தம் விடயங்களில் மறைமுகமாக வேனும் சமூகநம்பிக்கைகளை கடைப்பிடிக்கவே செய்கின்றனர்.

இதில் நாஸ்திக கொள்கையுடைய கலைஞர் கருணாநிதி கூட விலக்கில்லை.

ஒருமுறை தஞ்சைப்பெருங்கோயிலில் வீற்றிருக்கும் பிரகதீஸ்வரருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. கும்பாபிஷேகத்தையொட்டி மூங்கில் தடிகள், கிடுகுகள் கொண்டு மிகப் பிரமாண்டமான கொட்டகைகள் அமைக்கப்பட்டிருந்தன.

தஞ்சைப் பெருங்கோயில் இராஜகோபுரம்



(படங்கள். தம்பியண்ணா)

பெருங்கோயிலில் உள்ள இராஜ கோபுரத்திற்கும் குடமுழுக்கு இடம்பெற இருந்ததால் கோபுரத்தைச் சுற்றிலும் மூங்கில் தடிகளால் சாரம் கட்டப்பட்டிருந்தன.

விடிந்தால் பிரகதீஸ்வரருக்கு குடமுழுக்கு என்றிருந்த வேளை, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீவிபத்தால் ஆலயத்திற்குள் இருந்த 60பேர் கருகி மாண்டனர்.

கொட்டகைகள் முழுவதும் தீக்கிரையாகியது. குடமுழுக்கு காண இருந்த தஞ்சை மாநகர் சோகத்தில் மூழ்கியது. இறைவா! ஏன் இந்தத்துயரம்... நாமென்ன பாவம் செய்தோம். இந்த உருக்கமான வாசகம் உயிரிழந்தவர்களின் வீடுகளில் அழுகுரலாக எழுந்து காற்றலையில் கலந்து கொண்டது.

இந்த சோகம் நடந்த காலத்தில் தமிழக முதல்வராக இருந்தவர் கலைஞர் கருணாநிதி.

தீவிபத்து நடந்த பெருங்கோயிலை நேரில் பார்க்கச் சென்றார். கோயிலுக்குச்சென்றவர் கோயிலின் பிரதான வாயிலின் ஊடாக உள்ளே செல்லாமல், பின் பாதை வழியாகவே ஆலயத்திற்குள பிரவேசித்தார்.

**என்.விஜயன்**

இது குறித்து செய்தி வெளியிட்ட தமிழக ஊடகங்கள் பதவி பறிபோய் விடும என்ற பயத்தினாலேயே கலைஞர் கருணாநிதி பிரதான பாதையால் கோயிலுக்குச் செல்லவில்லை என விமர்சித்தன. (வளரும்)

### அன்பு வாசகர்களே!

தமிழகப்பயணம் தொடர் கட்டுரையை வாசிக்கும் நீங்கள் தருகின்ற ஆக்கத்திற்கும், ஊக்கத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேநேரம் லொயலாக் கொலச் தமிழ்த்துறை பேராசிரியர் லெனின் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு தொலை பேசிமூலமாகவும், தபால் மூலமாகவும் தாங்கள் தெரிவிக்கின்ற வாதப் பிரதிவாதங்களுக்கு நாம் உரிய மதிப்பளிப்போம்.

எனவே பயணக்கட்டுரை தொடர்பில் தங்களின் கருத்துக்கள் எழுத்துமூலம் தரப்படும் பட்சத்தில் அவை பிரசுரிக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

நன்றி

(ஆசிரியர்.)

### தங்களது இந்தியப் பயணக்கட்டுரை தொடர்பாக:

*பராசக்தி திரைப்படத்துக்கு வசனம் எழுதியவர் யார் என்பது பற்றிப் பேராசிரியர் லெனினின் கருத்துக்களை வெளியிட்டிருந்தீர்கள். மார்க்சிய சிந்தனை வாதியான லெனின் கொள்கை ரீதியாகத் திராவிட பாரம்பரியத்தை வெறுப்பது அதிசயமல்ல. ஆனால் செய்திகளை திரித்து, மறைத்துக் கூறுவது அவர் போன்ற புத்திஜீவிகளுக்கு அழகாகாது.*

*தென்னாட்டிலே ஒரு பாரிய சமுதாயப்புரட்சிக்கு வித்திட்டவர் ஈவேரா பெரியார் என்பதைக் கூட ஒப்புக்கொள்ள மறுக்கும் அவரிடம் எதை எதிர்பார்க்க முடியும்.*

*பராசக்தி திரைப்படமாகத் தயாரிக்கப்படுவதற்கு முன் அது பிரபல்யமான ஒரு மேடை நாடகம். இந்த நாடகத்தை எழுதியவர் பாலசுந்தரம் என்பவர்.*

*இதனைத் திரைப்படமாக ஏ.வி.எம். கூட்டுடன் தயாரிக்க விரும்பிய நஷனல் பிக்ஸர்ஸ் அதிபர் பெருமாள்- (இவர் அண்ணாவின் விசுவாசி. அண்ணாவின் வேலைக்காரி என்ற வெற்றிப்படத்தின் தயாரிப்பாளர்) அண்ணாவை அணுகி, அந் நாடகத்துக்கு திரைக்கதை வசனத்தை எழுதித்தரும்படியும், குணசேகரன் பாத்திரத்தில் நடிப்பதற்கு கே.ஆர்.இராமசாமியை ஏற்பாடு செய்து தருமாறும் கேட்டிருந்தார். அந்தக் காலத்தில் இராமசாமி புகழ்பெற்ற ஒரு நடிகர். அவருக்கு பல படங்கள் இருக்கின்றன. நான் ஒரு புது முகத்தைத் தருகிறேன். சிவாஜ்கணேசனை அப் பாத்திரத்துக்குப் போடவும். திரைக்கதை வசனத்தை கருணாநிதியைக் கொண்டு எழுதலாம் எனக் கூறி, அவ்வாறே ஏற்பாடு செய்தும் கொடுத்தார் என்பது பழைய வரலாறு தெரிந்த அனைவரும் அறிவர்.*

*ஆனால் பேராசிரியர் லெனின் பாலசுந்தரத்துக்கும், பத்மநாதனுக்கும் - நாடகத்துக்கும், சினிமாக் கதை வசனத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் தானும்குழம்பி தங்களையும் குழப்பிவிட்டிருக்கிறார். வலம்புரி தமிழ்நாட்டில் விற்பனையாகும் பத்திரிகையாக இருந்திருந்தால் இன்று பலத்த கண்டனங்களைக் கண்டிருப்பீர்கள்.*

*ப.ஜீவானந்தன் போன்ற பிரபல்யமான - கட்சி பேதமின்றி அனைவராலும் விரும்பப்பட்ட தலைவர் கூட, பொதுத் தேர்தலில் தி.மு.கவுடன் போட்டியிட்டு 10,000 வாக்குகளை மாத்திரமே பெறமுடிந்தது என்றால், அக் கட்சியின் செல்வாக்கு எந்த அளவில் இருந்தது, இருக்கிறது என்பது தெரியவரும்.*

*மற்றவர்களுடைய கதைகளை திரைப்படமாகத் தயாரிக்கும் போது திரைக்கதை - வசனத்தை வேறொருவர் எழுதுவதுண்டு. அண்ணாவின் 'ரங்கூன் ராதா' என்ற கதைக்கும், லக்ஷமியின் 'பெண் உள்ளம்' என்ற கதைக்கும் திரைக்கதை வசனம் எழுதியவர் கருணாநிதி.*

*நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன் ஆகியோர் பல்கலைக்கழகத்தில் படித்த நேரத்தில் அண்ணாவால் ஈர்க்கப்பட்டவர்கள். ஆனால் கருணாநிதி பள்ளிப்படிப்பை பாதியில் விட்டுவிட்டு கட்சியுடன் சங்கமமானவர். நெடுஞ்செழியன் நல்லவர்; ஆனால் வல்லவரல்ல.*

*பொ.இ, (கல்வியங்காடு*

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005

**வணிகக் கல்வியும் கணக்கீடும் II** **நேரம்:- 3மணித்தியாலம்**

**ஆக்கம்:- T.அன்ரன், வர்த்தகக் கல்லூரி.**

### பகுதி - I

◆**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. (i)வணிகம் வியாபாரத்திலும் பிரிந்தது விளக்குக?
(ii)வியாபாரத்தின் புதிய போக்குகள் யாவை?
(iii)பணப்பரிமாற்றத்தின் வளர்ச்சியின் பிரதான நான்கு கட்டங்களும் எவை?
(iv)பொருளாதார சூழலில் உள்ளடங்கும் பிரதான காரணிகள் நான்கு. தருக?
(v)சாதாரண பங்குகளில் முதலீடு செய்யும் பங்குதாரர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய 2 நன்மைகள் தருக?
(vi)முகாமையின் பிரதான தொழிற்பாடுகள் யாவை?
(vii)அ)'கோட்பாட்டு வழுக்கள்' எனப்படுபவை யாவை?
ஆ)'வருவாய் செலவுகள்' என்பதை விளக்கி 2 உதாரணம் தருக?
(viii)பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கிற்கும் வருமான செலவுக்கணக் கிறகும் இடையிலான வேறுபாடுகள் யாவை?
(ix)உற்பத்தி கிரயத்தினுள் உள்ளடக்கப்படும் பிரதான கூறுகள் யாவை?

### பகுதி - II 'அ'

◆**இரண்டு வினாக்களிற்கு மட்டும் விடை எழுதுக.**

02. (i)உடமை அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்திக் காட்டுக.
(ii)அ)சர்வதேச வியாபாரத்திற்கு ஏதுவாக அமையும் இரு காரணிகளைக் கூறுக.
ஆ)சிறப்புச் சந்தை ஒன்றின் இரு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக?
(iii)ஒரு உற்பத்தியாளன் தனது உற்பத்திகளை நுகர்வோருக்கு விநியோகிக் ககூடிய வழிமுறைகளைப் பாய்ச்சல் கோட்டுப் படத்துடன் விளக்குக.
(iv)கூட்டுறவு தத்துவங்கள் யாவை?
(v)பின்வருவனற்றிற்கு சிறுகுறிப்புத் தருக.
(அ)நாணயக் கடிதம் (ஆ)தோற்றுவாய் சான்றிதழ்

03. (i)போக்குவரத்துச் சாதனம் ஒன்றைத் தெரிவுசெய்யும்போது கவனத்தில கொள்ளவேண்டிய காரணிகள் யாவை?
(ii)இலங்கையில் வீதிப் போக்குவரத்துடன் ஒப்பிடும்போது புகையிரதப் போக்கு வரத்து அபிவிருத்தியடையாமைக்கான காரணங்கள் யாவை?
(iii)வங்கி தொழிற்சேவைகளின் புதிய போக்குகள் யாவை?
(iv)இலங்கையில் காப்புறுதி தொழிலில் ஈடுபடும் 4 நிறுவனங்களைக் குறிப் பிடுக.
(v)சிறந்த தொடர்பாடல் ஊடகத்தின் சிறப்பியல்புகள் யாவை?

04. (i)முதலீட்டு வாய்ப்புகளை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?
(ii)இலங்கைப் பொருளாதாரத்தில் முயற்சியாண்மையின் முக்கியத்துவம் யாது?
(iii)ஒரு நிறுவனம் தனது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தகுந்த முகாமையொன்றை பெற்றிருத்தல் அவசியம். விளக்குக.
(iv)சிறந்த தகவல் ஒன்றின் பண்புகள் யாவை?
(v)திட்டமிடலின் முக்கியத்துவம் யாது?

### பகுதி - II 'ஆ' - கணக்கீடு

05. 2004 டிசெம்பர் 31 இல் இருந்தவாறு பாமினி நிறுவனத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு

| | | |
|---|---|---|
| காணி கட்டடம் (கிரயத்தில்) | 80000 | |
| இயந்திரம் (கிரயத்தில்) | 40000 | |
| உபகரணம் | 20000 | |
| 2004/01/01 இல் இருப்பு | 30000 | |
| கொள்வனவு, விற்பனை | 100000 | 250000 |
| உட்சுமை கூலி | 4200 | |
| காப்புறுதி | 1800 | |
| பொதி செய் செலவு | 15000 | |
| கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் | 8000 | 12000 |
| 2004/01/01இல் ஐயக்கடன் ஏற்பாடு | | 500 |
| திரும்பல்கள் | 3000 | 2000 |
| கழிவுகள் | 800 | 600 |
| வாடகை | 1000 | |
| வங்கிக் கட்டணம் | 200 | |
| வங்கிக் கடன் | | 40000 |
| சம்பளம். | 2400 | |
| 2004/01/01 இல் இருந்தவாறு தேய்மானத்திற்கான ஏற்பாடு | | |
| இயந்திரம் | | 15000 |
| உபகரணம் | | 2000 |
| மூலதனம் | | 180000 |
| காசு | | |
| வங்கி | | |

மேலதிக தகவல்கள்

1)31/12இல் இருப்பு 20000

2)இன்னமும் கொடுக்க வேண்டிய செலவுகள் பின்வருமாறு:
மின்சாரம் 4000
காப்புறுதி 200

3)காலாவதியாகாத செலவுகள் பின்வருமாறு:
வாடகை 800
சம்பளம் 400

4)கிரயத்தின்மீதான ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு
இயந்திரம் 10%
உபகரணம் 5%

5)ஐயக்கடனுக்கான ஏறப்பாடு ரூபா 500 எனும் தொகையால் குறைக்கப்பட வேண்டும்.

தயாரிக்குக
(i)இலாப நட்டக் கணக்கு
(ii)ஐந்தொகை

06. (i)அ)காசேட்டின்படி வங்கிமீதியும் வங்கி கூற்றின்படி வங்கிமீதியும வேறு படுவதற்கான காரணங்கள் யாவை?
ஆ)வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து கிடைத்த காசோலையொன்றை இடம் தவறி வைத்துவிட்டாராயின் முதலாவதாக நீர் யாது செய்தல் வேண்டும்?
இ)பொதுத்தினசேரியில் பதிவு செய்யும் விடயங்கள் யாவை?
(ii)'சாளினி' வணிக நிறுவனத்தின் காசேட்டுக்கு அமைய 2005/ஏப்ரல்/30 ஆம் திகதியன்று இருந்தபடி வங்கி நிரலின் வரவு மீதி 8400 ஆகும். அதே திகதியல் வங்கி கூற்று மீதி வேறு ஓர் மீதியை காட்டியது. வேறு பாட்டிற்கான காரணிகள் பின்வருமாறு:
அ)வைப்புச் செய்யப்படடு இன்னமும் காசாக்கப்படாதிருந்த காசோலைக ளின் பெறுமதி 4000.
ஆ)நிலையான கட்டளைக்கு அமைய வங்கி வசூலித்த பங்குலாபம் 7500. செலுத்திய காப்புறுதி 3000.
இ)வழங்கப்பட்டு ஆனால் காசாக்கப்படுவதற்கு வங்கியிடம் சமர்ப்பிக்கப்படா திருந்த காசோலைகளின் பெறுமதி 10000.
ஈ)காசோலை புத்தகக் கட்டணம் 21 / 2 காசேட்டில் 9 / 2 எனப் பதிவு செயயப்பட்டிருந்தது.
உ)கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்று வங்கியில் அது வைப்பு செய்யப்பட்டதன் பின்னர் மறுக்கப்பட்ட காசோலை 800.
ஊ)வங்கியில் செலவு வைக்கப்பட வேண்டிய **5000/=** இற்கு பதிலாக 500 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
தயாரிக்குக.
(i)திருத்திய காசேடு
(ii)வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று.

07.
(i)அ)இரட்டைப் பதிவு கோட்பாடு என்பதன் கருத்து யாது?
ஆ)பின்வருவனவற்றிற்கு நாட்குறிப்பு பதிவுகளைத் தருக.
I கடனிற்கு விற்பனை II வெளித்திரும்பல்
இ)மூலதனம் + வருவாய் + நீண்டகாலப்பொறுப்பு + குறுங்காலப்பொறுப்பு =நீண்டகாலச் சொத்து+ நடைமுறைச் சொத்து + செலவீனம். எனும் சமன்பாட்டிற்கமைய கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவுகளை எடுத்துரைக்க.

(ii)உாிமையாளர் **50000/=** காசினையும் **25000/=** பெறுமதியான இருப்புகளையும் மூலதனமாகக் கொண்டுவந்தார்.

| | |
|---|---|
| தளபாட கொள்வனவு | 40000 |
| களுவிற்கு விற்பனை | 20000 |
| சனத்திடம் கொள்வனவு | 40000 |
| செலுத்திய காப்புறுதி | 2000 |
| பெற்ற பங்குலாபம் | 400 |
| கங்குலியிடம பெற்றகாசு | 8000 |
| வங்கியில் இருந்து பெற்ற கடன் | 30000 |

உரிமையாளர் தனது மகனின் பிரயாண செலவிற்காக நிறுவனத்தில் இருந்து எடுத்த காசு 20000.

**10000/=** இருப்பு **20000/=** இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(i)காசேடு, பேரேடு, பொதுநாடகுறிப்பேடு என்பவற்றைத் தயார் செய்க?

## கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை

**வணிகக்கல்வியும் கணக்கீடும்** **பகுதி I இன் விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01.(4) | 02.(1) | 03.(3) | 04.(3) | 05.(4) | 06.(2) |
| 07.(1) | 08.(1) | 09.(1) | 10.(3) | 11.(2) | 12.(3) |
| 13.(4) | 14.(3) | 15.(1) | 16.(3) | 17.(2) | 18.(3) |
| 19.(1) | 20.(2) | 21.(3) | 22.(2) | 23.(3) | 24.(2) |
| 25.(4) | 26.(2) | 27.(1) | 28.(3) | 29.(3) | 30.(2) |
| 31.(1) | 32.(1) | 33.(3) | 34.(1) | 35.(1) | 36.(4) |
| 37.(3) | 38.(1) | 39.(4) | 40.(2) | | |

**க.பொ.த.சாதாரண தர மாணவர்களே!**
**உங்கள் வலம்புரியில் தொடர்ந்தும் பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.**

# உங்களுக்கு அறிவும் கண்களுக்கு ஒளியும்

"எண் என்ப ஏனை எழுத்தென்ப இவையிரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு"
என்கிறார் வள்ளுவர்.
"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"
என்கிறார் ஔவையார்.

இவை கண்களின் பெறுமதியை விளக்கும் பாடல்கள். ஆண்டவனின அருட்கொடையான கண்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை கேள்வி- பதில் என்ற அமைப்பில் எமக்குத் தருகிறார் கண அறுவைச் சிகிச்சை மருத்துவ நிபுணர் ரெஜி சீமன். அவருடைய கேள்வி-பதில்கள் உங்களுக்கு அறிவும் கண்களுக்கு ஒளியும் என்ற தொடரில் இன்றிலிருந்து செவ்வாய் தோறும் வெளிவரும்.

கேளவி-பதில்கள் கண்ணைப் பறறிய எல்லா விடயங்களையும் வெளிப் படுத்தாவிட்டாலும் சாதாரண மக்களின் அனேக சந்தேகங்களுக்கு விடையளிப்பதாக அமைந்துள்ளது.

## கண் நோய்கள் பற்றிய கேள்வி-பதில்கள்

**1**. ஓர் இளம் வயது பெண்: நான் அண்மையில் திருமணம் செய்யப்போகிறேன் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க தரும் ஆலோசனைகள் என்ன?



**மருத்துவர்:**

1. உங்கள் பெற்றோரின் உடன் பிறந்தவர்களுடனோ அல்லது உங்கள் இரத்த உறவினருடனோ நீங்கள் திருமணம் செய்யமாட்டீர்கள் என்று நம்புகிறேன். ஏனெனில் குருட்டுத் தன்மை, இதய உறுப்பில் குறைபாடுகள், மனநிலைக் கோளாறுகள், மந்தபுத்தி போன்ற இயற்கைக்கு மாறான பிறப்புகளுக்கு ஆளாவது மேற்குறிப்பிட்ட திருமணங்களினால் உருவாகும் சந்ததியினரே.

2. "ருபெல்லா" எனப்படும் ஜேர்மன் சின்னம்மை நோய்க்கெதிராக உடனடியாக தடுப்பு ஊசி ஏற்றிக்கொள்ளவேண்டும். ஏனெனில் கருத்தரித்து முதல் மூன்று மாதங்களுக்குள் நீங்கள் ஜேர்மன் சின்னம்மை நோயால் பீடிக்கப்பட்டால் உங்கள் குழந்தை இதய உறுப்பில் குறைபாடுகள், கண்ணில் குறைபாடுகள், செவிடடுத்தன்மை ஆகிய பாதிப்புகளுடன் பிறக்க நேரிடலாம.

எவ்வாறாயினும், தடுப்பு ஊசி ஏற்றிய பின் தொடர்ந்து மூன்று மாதங்கள் வரை கருத்தரிக்கக் கூடாது என்பதை கண்டிப்பாகக் கூற விரும்புகிறேன்.

3. நீங்களும், நீங்கள் மணமுடிக்க இருப்பவரும் எய்ட்ஸ் (**H.I.V** வைரஸ்) பரிசோதனை செய்துகொள்வது முன்யோசனையான செயலாகும்.

4.பாலுறவின் மூலம் தொற்றக் கூடிய "கொனோரியா", "சிபிலிஸ்" போன்ற நோய்கள் இருக்கிறதா எனபதை அறிய மருத்துவ பரிசோதனைசெய்து கொள்ள வேண்டுமென்பதையும் நான் அறிவுறுத்துகிறேன்.

5. இரததத்தின் வகையையும் (**O.A.B.AB**) முக்கியமாக (**Rh.Factor**) பற்றியும் அறிந்து கொள்ள நீங்களும், நீங்கள் மணம செய்ய இருப்பவரும் இரததப் பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம்.

**2**. தாய்: சில நாட்களுக்கு முன் பிறந்த எனது குழந்தை கண்களைத் திறப்பதில்லை. கண இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கின்றன. கண் இமைகளை கைகளினால் திறக்கும் போது சீழ் வடிகின்றது.

**மருத்துவர்**: உங்கள் குழந்தையின் கண்களில் தொற்று நோய் (**Neonatal Conjunctivitis**) ஏற்பட்டுள்ளது. உடனடியாக வைத்தியம் செய்யாவிட்டால் கண்கள் குருடாகவும் இடமுண்டு.

**3**. தாய்: எனது இரண்டு மாதக குழந்தைக்கு பிறந்த சில நாட்களிலிருந்து ஒரு கண்ணில் கண்ணீர் தொடர்ந்து வடிகின்றது. குழந்தை அழும்போது கூடுதலாக கண்ணீர் வடிகின்றது. குழந்தை காலையில் விழிக்கும்போது மஞ்சள் நிற சீழ வடிகின்றது இதற்கான காரணம என்ன?

**மருத்துவர்**: கண்ணீர்காண் பூரணமாக உற்பத்தியாவதற்கு சிறிது காலம எடுக்கும். கண்ணீா காண் உற்பத்தியாகும்வரை இப்படிக் கண்ணீர் வடியும். இது மூன்று வருடங்கள் வரை நீடிக்கும. அதனால் பயப்படாமல் பொறுமையாக இருங்கள. இதற்கு மருந்து போட்டுப் பார்க்கலாம்.


**4**. தாய்: எனது இருவயதுக் குழந்தைகக்கு இரவில் பாலூட்டும் போது கண்ணுக்குள் வெண்மையாக மின்னுவதைக் கண்டேன் காரணம் என்ன?

**மருததுவர்:** கண்ணுக்குள் வெண் பூவாகவோ (**Cataract**), புற்று நோயாகவோ இருககலாம். பரிசோதித்துப் பார்த்து சிகிச்சை செய்ய வேண்டும்.

**கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர்**
**ரெஜி சீமன்**

**5**. தாய்: எனது மூன்று வயது மகனுக்கு மாறுகண் இருக்கிறது. சிலர் இதனை அதிர்ஷ்டம என்றும் சொல்கின்றார்கள். ஆனால் எனக்குப் பயமாக இருககிறது. இதற்குக் காரணம் என்ன?

**மருத்துவர்**: மாறுகண் படிப்படியாக பார்வையை இழந்து விடும. கண்ணாடி அணிவதால் மட்டும் கண்களை நேராக்கலாம. அறுவைச்சிகிச்சை கட்டாயம் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை.




பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு உலக விஷன் நிறுவனம் 6இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களைக் கையளித்தது. இவ் வைபவத்தில் யாழ்.சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரன் உரையாற்றுவதையும், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை, உலக விஷன் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் இருப்பதையும், உலக விஷன் நிறுவன இணைப்பதிகாரி வைத்தியசாலை உத்தியோகத்தர்களிடம் வைத்திய உபகரணங்களைக் கையளிப்பதையும் காணலாம்.

(படங்கள்:- பரு.நிருபர்)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(கோப்பாய்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜி ச.ச.நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வுகள் எதிர்வரும் 7ஆம் திகதி பி.ப.2.30மணியளவில் நிலைய முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் இ.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக அதிபர் மு.விக்னேஸ்வரன், ஓயவுபெற்ற அதிபர் மா.மதுரைநாயகி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய்க் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் து.செம்பருதி, திருமதி நவநீதம் ஜெகதீசன், ஆ.சத்தியமூர்த்தி, செல்வி மகிழினி பவளகேசரி, உரும்பிராய் கிழக்கு கிராம சேவையாளர் செ.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-79)

## பரு.நகரசபை அலுவலகம் தும்பளைக்கு இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபை அலுவலகம கடந்த 27ஆம் திகதி தொடக்கம் தும்பளை மணியகாரன் சந்தியில் உள்ள கட்டடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. இக் கட்டடத்திலேயே முன்னர் யுத்த அனர்த்த காலங்களிலும் இவ் அலுவலகம் இயங்கி வந்தது.

இதுவரை இயங்கிவந்த கட்டட சொந்தக்காரருடன் செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தகாலம் முடிவடைந்த பின்னரும் இரண்டு வருடகாலம் அக்கட்டடத்திலேயே நகரசபை இயங்கிவந்துள்ளது. தற்போது கட்டட உரிமையாளர் கட்டடம் தேவையென அறிவித்தல் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் நகரின மையப்ப்குதியில் கட்டடஙகள் வசதியாகக் கிடைக்காமையினாலேயே இவ் அலுவலகத்தைத் தும்பளைக்கு இடமாற்றம் செய்ய வேண்டி ஏற்படடதாக நகரசபைச் செயலாளர் திருமதி கமலாதேவி திருச்செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான முன்னர் அலுவலகம் இயங்கிவந்த காணி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டுவிட்டது. இக்காணியில் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு நகரசபை நிர்வாகம் கேட்டுக்கொண்ட போதும் பாதுகாப்பு அமைச்சு அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டது.

தற்போது 3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான காணியில் நகரசபை அலுவலகத்திற்கான கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-52)

## தொலைபேசி

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்திற்கு தொலைபேசி வழங்கப்பட்டுள்ளது.

வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் சி.தர்மலிங்கத்தின் குடும்பம் இத் தொலைபேசி இணைப்புக்கான நிதிஉதவியை வழங்கியிருந்தது.

தொலைபேசி இணைப்பு கிடைத்தமையால் வித்தியாலயத்தின் பல்வேறு நடவடிக்கை இலகுபடுத்தப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் எம்.அனந்தீஸ்வரன் தெரிவித்தார். (அ-52)

## அரச சேவையில் சேர்பவர்களுக்கு இருமொழித் தேர்ச்சி கட்டாயம்

### அமைச்சர் டியூ.குணசேகர அறிவிப்பு

(கொழும்பு)

இனிவரும் காலங்களில் அரச சேவைக்கு ஆள் திரட்டப்படும் பொழுது அத்தகையோர் கட்டாயமாக தமிழ், சிங்கள மொழிகளில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும் என அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்நாடடில் தமிழும், சிங்களமும் அரச கரும மொழியாக இருக்கும்பொழுது அவற்றை முறையாக செயற்படுத்தாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநா மகாநாட்டு மண்டபத்தில் அரச கரும மொழிகள் கொள்கை பற்றி அரச ஊழியர்களுக்கு விளக்குவதறகு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த அறிவூட்டல் மாநாடடில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வைபவத்தில் ஆளுநர் மொண்டி கொபல்லாவ,பிரபல தொழிற்சங்கவாதி டபிள்யூ.எச். பியதாஸ உட்பட பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அரச சேவையாளர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், எமது நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களின் சமய, கலாசார பண்பாடுகளோடு மொழியும் அபிவிருத்தியடைய வேண்டும்.

1987ஆம் ஆண்டு தமிழும் சிங்களமும் அரசகரும மொழியாக அரசியல் சாசனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இதனை வடக்கு-கிழக்குக்கு அப்பால் எவருமே நடைமுறைப் படுத்துவதாகத் தெரியவில்லை. யுத்தம் ஒன்று ஏற்படக் காரணமாக இருந்ததும் மொழியில் காட்டப்பட்ட பாகுபாடாகும்.

இன்று வடக்கிலும், கிழக்கிலும் பணிபுரியும் படைவீரர்களுக்கோ அன்றி பொலிஸாருக்கோ தமிழ்மொழி தெரியாது. சிங்கள மொழி மாத்திரமே தெரிந்தவர்கள் அப்பகுதிகளில் கடமையாற்றுவதால் தமிழ் மக்கள் கூறுபவற்றைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்படக்கூடிய மொழியாற்றல் இவர்களுக்குக் கிடையாது.

60ஆயிரம் பொலிஸாரில் தமிழ் மொழியை ஓரளவு உணர்ந்தவர்கள் 600பேர் மாத்திரமே. இப்படி இருந்தால் அரச கருமமொழியின் பிரயோகம் என்னவாக இருக்கும்?

யுத்தம் ஒன்று உருவாவதற்கு காரணமாக இருந்ததே மொழியில் காட்டப்பட்ட பாகுபாடுதான். இந்தப் பாகுபாடுகளை நாம் தொடர வேண்டுமா? 58 ஆண்டுகளாக இருந்து வருகின்ற இந்தப் பிரச்சினை இன்றுவரை தீர்க்கப்படவில்லை.

எனவே பொலிஸ் திணைக்களம், வைத்தியசாலைகள உட்பட பல முக்கிய இடங்களில் பணிபுரியும் சிங்கள ஊழியர்களுகக்கு தமிழைக் கற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

எனவேதான் அரச கரும மொழித் திட்டங்களை செவ்வனே செயற்படுத்துவதற்காகத் தலைநகரில் மொழி பயன்பாடு தொடர்பான நிலையம் ஒன்றை உருவாக்கக் கருதியுள்ளோம்.

இதன் மற்றுமோர் அஙகமாகவே சகல அரச திணைக்களங்களுக்கும் ஆட்கள் திரட்டப்படும் பொழுது கட்டாயமாக சிங்கள, தமிழ ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியை பெற்றிருக்கவேண்டும் என்ற கட்டாயம் இனிவரும் காலங்களில் பிறப்பிக்கப்படும் என அவர் மேலும தெரிவித்தார். (து-9)

# இவ்வாண்டில் ஜனாதிபதித் தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது?

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் நாள் குறித்து இம்மாதம் அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் விடுக்கவுள்ளார். இந்த அறிவிப்பு இம்மாதம் ஓரு வாரங்களில் விடுக்கப்படவுள்ளது.

தேர்தல் திணைக்கள கணிப்புகளின்படி நவம்பர் மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும். ஜனாதிபதி பதவிக்காலம் தேர்தல் சட்டம், அரசியலமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தேர்தல் திணைக்களம் தற்போது அஞ்சல் வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் அச்சிடப்படடு வருகின்றன.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் நடவடிக்கை குழு இன்று கூடித் தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் உத்தியோகபூர்வமாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பித்து வைக்கபபடவுள்ளது. சீனாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் ஆரம்பித்துவைக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கையை அதன் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தற்போது முன்னெடுத்துச் செல்வது குறிப்பிடததக்கது. (அ-8)

# இரு வேறு விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

மாதம்பை, ஹிங்குராங்கொட பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு வாகன விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

சிலாபம் மாதம்பை பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை ஊனமுற்ற 75 வயதான பெண்ணொருவர் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் சிலாபம் பகுதியிலிருந்து வந்த லொறியொன்று மோதியதாகவும், அதையடுத்து வான் ஒன்று மோதியதாகவும இதனையடுத்து ஊனமுற்ற பெண் உயிரிழந்ததாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலுடன கார் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து ஹிங்குராங்கொட ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்தார். பொலிஸார் இவ் விபத்துக்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-8)

# முகமாலையில் படையினர் சோதனை மீன் வியாபாரிகள் வேதனை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து யாழ்.குடாநாட்டில் உள்ள சந்தைகளுககு மீன எடுத்துவரும் வியாபாரிகள் மீது முகமாலையில் வைத்துப் படையினர் கெடுபிடிகளை மேற்கொள்வதாக பொதுமக்கள் விசனம வெளியிட்டுள்ளனர்.

மீன் வியாபாரிகளால் வாகனங்களிலும், சைக்கிள்களிலும் எடுத்து வரப்படும மீன்களை முகமாலையில் இறக்கி படையினர் சோதனையிடுவதாகவும நீண்ட நேரம தடுத்து வைத்திருப்பதாகவும் இதனால் தமது மீன்கள் பழுதடைவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சில பெரிய மீன்களை வெட்டிய பின்பே கொண்டு செல்லமுடியும் எனவும் படையினர் கூறியுளளனர்.

பெரிய மீன்களுக்குள் குண்டு கொண்டு செல்வதாக தமககு தகவல்கள் கிடைத்ததாலேயே தாம் அவற்றை வெட்டிப் பார்க்க வேணடி ஏற்படுவதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். (அ-43)

# வடமராட்சி கிழக்கின் புனரமைப்புக்கு உள்ளூராட்சித் திணைக்களம் நிதி ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிககப்படட பொதுக்கட்டடங்களைப் புனரமைப்பதற்கென வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன பற்று உப - அலுவலகம், செம்பியன் பற்று பொது நூலகம், செம்பியன்பற்று தெற்கு சனசமூக நிலையம், மணற்காடு பொதுச் சந்தை, பொற்பதி பொதுச்சந்தை, மாமுனை பொதுச்சந்தை, மருதங்கேணி பொதுச் சநதை ஆகியனவற்றின் கட்டடங்களின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான ஆரம்பவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை பரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி தெரிவித்தார். (அ-52)

# அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களின் முன்னிலையில் தெரிவு செய்யப்பட தலைவா் என்ற வகையில் நாட்டு மககளின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் நாட்டு மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

அடுத்து ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியீட்டினால இனமத பேதமின்றி நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

களனி விகாரையில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற சமய வழிபாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமா இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபகஷ இந்த சமய வழிபாட்டில கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# வெப்பத்தடுப்பு தகடு விழுந்ததால் 'டிஸ்கவரி'க்கு எதுவித பாதிப்புமில்லை

(ஹூஸ்டன்)

டிஸ்கவரி விண்கலம் கடந்த செவ்வாய்க கிழமை விண்ணில் செலுத்தப்பட்டபோது எரிபொருள் டாங்கியின் வெப்பத்தடுப்பு தகடு உடைந்து விழுந்தது. இதனால் விண்கலத்துக்குச் சேதம் எதுவும் இல்லை. அதனால் எந்தப பாதிப்பும் இல்லை என்று தெரியவந்துள்ளது.



அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் டிஸ்கவரி விண்கலத்தை விண்ணில ஏவி உள்ளது. விண்கலத்தை சுமந்து சென்ற எரிபொருள் கலன் விண்கலத்தை பத்திரமாக வானில் ஏவியவுடன் சுழன்று பூமியை நோக்கி வருகிறது.

டிஸ்கவரி விண்கலத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் எடுத்த போட்டோ மற்றும் வீடியோ காட்சிகளைப் பார்த்த விண்வெளி நிலைய அறிஞர்கள் விண்கலம் சேதமடைந்ததற்கான தடயம் எதுவும் இல்லை என்று கூறியதாகத் திட்டத் துணைத் தலைவர் வெய்ன் ஹேல் கூறியுள்ளார்.

விண்கலம் பூமிக்குத் திரும்பும்போது எந்த ஆபத்தும் ஏற்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

டிஸ்கவரி விண்கலம் கடந்த வியாழக் கிழமை சர்வதேச விண்வெளி நிலையத்துடன இணைந்தது. 7 விண்வெளி வீரர்களும் விண்கலத்தில் இருந்து ஆராய்ச்சி நிலையத்துக்குள் நுழைநதனர்.

விண்வெளி வீரர்கள் 15 தொன் உணவுப பொருள்களை எடுத்துச் சென்றிருந்தனர். அவையும் ஆராய்ச்சி நிலையத்துக்கு மாற்றப்பட்டன. ஆராய்ச்சி நிலையத்திலருந்த கழிவுப் பொருள்களையும் அவர்கள் அப்புறப்படுத்தினர்.

விண்வெளி நிலையத்தில் செர்ஜி கிரிகலேப், ஜான்பிலிப் ஆகியோர் கடந்த 103 நாட்களாகத் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்து வருகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஐ.தே.க சிறப்பாகச் செயற்படுகிறது

**-ராஜித சேனாரட்ண எம்.பி**

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் நிலவிய குறைபாடுகளை நிவிர்த்தி செய்துகொண்டு மக்களின தேவைகளைப் புரிந்துகொண்டு தற்போதைய தலைமைத்துவம் செயற்படுவதாக அக்கட்சியின பாராளுமன்ற உறுப்பினா டாக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் இரண்டரை வருட ஆட்சிக் காலத்தில் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சில குறைபாடுகள் நிலவியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலதரப்பட்ட அநீதிகளுக்குள்ளான மக்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க எதிர்க்கட்சியிலிருந்து செயற்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளாா. (ற-9)

# சிறந்த ரயில் சேவையை நடத்த 153 ரயில் எஞ்சின்கள் தேவை

(கொழும்பு)

சிறந்த ரயில் சேவையை நடத்துவதற்கு குறைந்தது 153 ரயில் எஞ்சின்கள் தேவைப்படுவதாக ரயில்வே திணைக்களம் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

தற்சமயம் திணைக்களத்திடம் 131 ரயில் எஞ்சின்களும் பவசெற்றுக்களும உள்ளன. 75 சதவீதமான ரயில் பெட்டிகள் 15 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தவை என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டிலுள்ள ரயில் பாதைகளில் அரைவாசிக்கும் கூடுதலான ரயில் பெட்டிகள் குறைந்தபடச தரங்களைப் பேணுவது கூட இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுளளது. (ற-2)

# மேல் கொத்மலை மின்சார மையம்; இருவாரங்களில் திட்டம் ஆரம்பம்

மேல் கொத்மலை மின்சார மையத்திட்டம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் திட்டமிட்டபடி 5 நர்வீழ்ச்சிகளைகொண்டு அமுல்செய்யாமல் செங்கிளையின் நீர்வீழ்ச்சியை மாத்திரம் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தபபடவுள்ளது.

இதன் காரணமாக ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட 150 மெகவாற மின் வலுவில் 20 வீதம் குறைந்த அளவிலேயே மின் உற்பத்தியை மேல கொத்மலை மின்மையத் திட்டத்தின் மூலம் பெறமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# கற்கோவளம் பிரதேசத்துக்கு யூ.என்.டி.பி. நிதியுதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை கற்கோவளப் பிரதேச புனரமைப்புக்கென யூ.என்.டிபி 5 இலட்சம் ரூபாவை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினூடக வழங்கியுள்ளது.

இந்நிதியினைப் பொறுப்பேற்றுக் கொண்ட கற்கோவளம் கடற்றொழிலாளா கூட்டுறவுச் சங்கம் இந்நிதியைக கொண்டு புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொணடுள்ளது.

கற்கோவளம் கடற்கரைப் பிரதேசததைத் துப்புரவு செய்ததுடன் சுனாமியின்போது இக கடற்கரைப் பகுதியில் அடைந்திருந்த மரங்களையும் அப்புறப்படுத்தியுள்ளது.

கற்கோவளம் - புனித நகர் வீதியும, கற்கோவளம - சொர்ண பூமித்திட்ட வதியும் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் நவோதய வார இறுதிநாள் நிகழ்வுகளைப் பாடசாலை அபிவிருததச் சங்கச் செயலாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செலவராஜா, பிரதி அதிபர் திருமதி. இந்திராணி ஸ்ரீ ரங்கன் ஆகியோரையும், மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப்பதையும், பிரதிக் கல்வப்பணப்பாளர் எஸ்.நந்தகுமார் கல்விக் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் காணலாம். (படங்கள் : பரு. நிருபர்)



இலங்கைக்கு வரவுள்ள பிரிட்டிஷ் கப்பல்.

# இலண்டனில் 3 ஆவது முறையாக தாக்குதல் நடத்தத் திட்டம்

## 24 மணிநேரமும் பொலிஸ் உஷார் நிலை

(இலண்டன்)

இலண்டனில் 3ஆவது முறையாக தற கொலைப்படைத் தாக்குதல் நடத்தத் தீவிர



மேற்கு இலண்டனில் உள்ள டீயா பாடி எஸ்டேட்டில் ஒரு வீட்டில் சோதனை நடத்திவிட்டு பொலிஸ் அதிகாரியுடன் தடயவியல் நிபுணர் வெளியே வந்தபோது எடுத்தபடம்.

வாதிகள் திட்டமிட்டுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து நகரம் முழுவதும் 6 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் கடந்த மாதம் 7ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் சுரங்க ரயில்களிலும், பஸ்சிலும் நடந்த குண்டுவெடிப்பில் 54பேர் பலியானார்கள். 700 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து இலண்டன் நகர மக்கள் மீளுமுன் கடந்த 21ஆம் திகதி தீவிரவாதிகள் மீண்டும் சுரங்க ரயில்பாதை பஸ்ஸில் குணடுகள் வெடிக்கவைத்தனர். இதில் உயிர்ச்சேதம் இல்லை. 21ஆம் திகதி குண்டு வைத்த 4 தீவிரவாதிகளும் பிடிபட்டுவிட்டனர்.

இந்தநிலையில், இலண்டனில் 3ஆவது முறையாக தீவிரவாதிகள் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்போவதாக இலண்டன் உளவுப் பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து முக்கிய சாலைகளில் உள்ள பாலங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் உளவுப்பிரிவுக்குக் கிடைத்த தகவல்படி 29ஆம் திகதி தற்கொலைப் படைத தாக்குதல் நடக்கவில்லை. பொலிஸுக்குத் தகவல் கிடைத்துவிட்டதால் தீவிரவாதிகள் உஷார் ஆகி தாக்குதல் நடத்துவதைத் தள்ளி வைத்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (து)

# 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(பக்தாத்)

ஈராக்கில் பக்தாத் அருகே உள்ள ஒரு கிராமத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஈராக்கிய இராணுவம மீது தீவிரவாதிகள் ராக்கெட் குண்டுகளை வீசித் தாக்கினர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும வகையல் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிரியா நாட்டைச் சேர்ந்த 5 பேர் உட்பட 9 தவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகளின் மறைவிடங்களும், பதுங்கு குழிகளும் அழிக்கப்பட்டன. (ற)

## ஐ.நா பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமை;

# இந்தியாவின் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு வந்தால் எதிர்ப்போம்

## -சீனா

(பீஜிங்)

இந்தியா உட்பட நான்கு நாடுகளுக்கு ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து தரும் வகையிலான தீர்மானத்தை இந்தியா தயாரித்துள்ளது.

இதன் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டால் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்போம் என்று சீனா கூறியுள்ளது.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் தற்போது 15 உறுபபினர்கள் உள்ளனர். இந்தியா, பிரேசில், ஜெர்மனி, ஜப்பான், ஆபிரிக்கப் பகுதியிலிருந்து இரு நாடுகள் ஆக 6 நாடுகளுக்கு நிரந்தர உறுபபினர் அந்தஸ்து தருவது (வீட்டோ அதிகாரம் இல்லாது), நிரந்தரம் அலலாத அந்தஸ்தில் 4 நாடுகளைச் சேர்பபது ஆகியன புதிதாகத் தயாரிக்கப்பட்ட வரைவு தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாகும்.

வளரும் நாடுகளில் பெரும்பாலானவற்றுக்கு, குறிப்பாக, சிறிய, நடுத்தர நாடுகளின் நலன்கள் இந்தத் தீர்மானத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சீனா கூறுகிறது. வாக்கெடுப்பு வலியுறுத்தப்பட்டால், அது ஆபிரிக்கா, ஆசியா இடையே ஒற்றுமையை பாதிக்கும் என்றும் அது கூறுகிறது. இது ஐ.நாவின் நலனுக்கு நல்லது அல்ல என்றும் அது கருதுகிறது. அதனால் அத்தீர்மானத்தை எதிர்பபதாக சீன வெளியுறவுத்துறை பத்திரிகைத் தொடர்பாளர் காங் குவான் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், இத்தீர்மானத்துக்கு உருகுவே ஆதரவு தெரிவித்துள்ளது. உருகுவே அதிபர் தபேரா வாஸ்குயிஸ், பிரேசில் அதிபர் லூயிஸ் லுலா டி சில்வாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார். அப்போது தமது நாட்டின் ஆதரவை அவர் தெரிவித்துள்ளார். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# காவலாளியைக் கொன்றுவிட்டு 20 இலட்சம் ரூபா கொள்ளை

நிதி நிறுவனமொன்றில் காவலாளியின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு 20 இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. கொள்ளையரைப் பிடிக்க பொலிஸ் தனிப்படை அமைத்து தேடுதல் வேடடையை முடுக்கி விட்டிருக்கிறது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம சென்னை ராயப்பேட்டையில் உள்ள நிதி நிறுவனமொன்றில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்துக்கும், சமீபத்தில் இந்நிதி நிறுவனத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட கூர்க்கா ஒருவருக்கும் சம்பந்தமிருக்கலாமென்ற சந்தேகத்தில் பொலிஸ் அவரைத் தேடிவருகிறது. (து)



ஸ்பெயின் நாட்டில் எல் காஸ்டிலோ அருகில் உள்ள கேனரி தீவில் கடல் சிங்கங்களின் வினோத விளையாட்டை சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசிக்கின்றனர்.

# எகிப்து தொடர் குண்டுவெடிப்பு 6 பேரை பொலிஸ் தேடுகிறது

எகிப்து நாட்டின் ஷார்ம்-எல்-சேக் வாசஸ்தல குண்டு வெடிப்பு தொடாபாக பாகிஸ்தானியர் 6 பேரை எகிப்து பொலிஸார் தேடுகின்றனர். 88பேரை பலிகொண்ட குண்டுவெடிப்பு நடந்தபோது ஷார்ம்-எல்-சேக்கில் அந்த 6 பாகிஸ்தானியர்களும் இருந்திருக்கின்றனர்.

ஷார்ம்-எல்-சேக் குண்டுவெடிப்பில அந்த பாகிஸ்தானியர்களுக்கு நேரடியாக தொடர்பு இருக்கலாம் அல்லது குண்டுவெடிப்பு சதியில அவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என எகிப்து புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.


கடந்த சனிக்கிழமையன்று ஷார்ம்-எல்-சேக நகரின கார்டன் ஹோட்டலில் நடந்த குண்டுவெடிப்பில பாகிஸ்தானியர்களுக்கு தொடர்பு இருப்பது என்பது அங்கே கிடைத்த தடயங்கள் மூலம் தெரியவந்ததாக புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஷார்ம் நகரில் எந்த ஹோட்டலில் அந்த பாகிஸ்தானியர் தங்கியிருநதார்கள் என்ற வபரத்தை தெரிவிக்க எகிப்து பொலிஸார் மறுத்துவிடடனர். எனினும் அந்த பாகிஸ்தானியர்களை தேடிவருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

எகிப்தின் அண்மைக்கால வரலாற்றில இத்தகைய பயங்கர குண்டுவெடிப்புகள் நடந்தது இல்லை என பொலிஸார் தெரிவித்தனர். தொடர் குண்டுவெடிப்புகளில் 88பேர் பலியானதுடன் ஏராளமானோர் காயமடைந்தனா. (து)

# கர்நாடக துணை முதல்வரை பதவி இறக்க தேவகவுடா முடிவு

(பெங்களூர்)



கர்நாடக மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியில் பிளவு வெடித்தது. அந்த கட்சியை சேர்ந்த துணைமுதல்வர் சித்தராமையா மற்றும் 2 மந்திரிகளை நீக்க கட்சித் தலைவா தேவகவுடா தீர்மானித்துள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் - மதச்சார்பற்ற ஜனதா தளம கூட்டணி அரசு உள்ளது. முதல்வராகக் காங்கிரஸைச் சேர்ந்த தரம் சிங்கும் துணைமுதல்வராக மதச்சாபற்ற ஜனதா தளத்தை சேர்ந்த சித்தராமையாவும் இருக்கிறார்கள்.

கட்சித் தலைவர் தேவகவுடாவை மதிக்காத வகையில சிதத்ராமையா செயல்பட்டதால் இவர்களுக்கிடையில் மோதல ஏற்பட்டது.

கூட்டணி கட்சியான மதச்சார்பற்ற ஜனதா தளத்தில் நடக்கும் இந்த கோஷ்டி மோதலை காங்கிரஸ் உன்னிப்பாக கவனித்து வருகிறது.

காங்கிரஸ் முதல்வர் தரம் சிங், புதிதாக நியமிக்கப்பட்ட மாநில காங்கிரஸ் தலைவரும் மந்திரியுமான மல்லிகா ஜுன் கார்கே ஆகியோர் சோனியாவுடன் ஆலோசனை நடத்த நேற்றுமுன்தினம் டெல்லி சென்றனர். (து)

# சீனாவில் பயங்கர சூறாவளி 11 பள்ளி குழந்தைகள் பலி

(பீஜிங்)



சீனாவின் கிழக்குப் பகுதியில் வ்சிய சூறாவளிக் காற்றுக்கு 11 பள்ளிக் குழந்தைகள் உட்பட 15 பேர்பலியாயினர்.

சீனாவின் கிழக்குப் பகுதியில் அனகுயி மாகாணத்தில் கடந்த சனிக்கிழமை மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளிக் காற்றில பள்ளிக்கூடம் ஒன்றில் வகுப்பறையின் கூரை இடிந்து விழுந்ததில் 11 குழந்தைகள் உட்பட 15 போ பலியாயினர். சூறாவளியில் வாகனங்கள அனைத்தும் நிலைகுலைந்ததுடன் மரங்களும் வேருடன் சாய்ந்தன. 12, 13 வயதிற்குட்பட்ட இந்தக் குழந்தைகள் ஜுனியர் மிடில கிளாசில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தவர்கள் என்று சீனாவில் இருந்து வெளியாகும் 'யூத் டெய்லி' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சூறாவளியில் இறந்தவர்கள் 12பேர். இதில், எட்டுப் பேர் தொழிலாளர்கள், தொழிறசாலையைச் சூறாவளி தாக்கியபோது அவர்கள்பலியாயினர் என்று செய்தி நிறுவனம ஒன்று வெளியிட்ட செயதியில் கூறப்பட்டுள்ளது.(து)

# சூறாவளியால் டிரான்ஸ்போமர், 8 மின்கம்பங்கள் சரிந்து விழுந்தன

(கோயம்புத்தூர்)

கோயம்புத்தூரில் நேற்றுமுன்தினம் வீசிய சூறாவளிக் காற்றில் பாரிய டிரான்ஸ்போமா ஒன்றும் 8 மின்சாரக் கம்பங்களும் அடுத்தடுத்துச் சரிந்து விழுந்தன.

ஒரு மின்கம்பம் மினிபஸ் ஒன்றின் மீது விழுந்ததில் அந்த மினிபஸ் பலத்த சேதத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் 200 பேர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் நடந்தது. டிரான்ஸ்போமர் சரிந்து விழுந்த சப்தத்தால் அந்தத் தெருவே கிடுகிடுத்தது. டிரான்ஸ்போமர் விழுந்தவுடன் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் பலத்த உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு மாத்திரம் துண்டிக்கப்படாமலிருந்திருந்தால் மினிபஸ் மீது மின்சாரம் பாய்ந்து பயணிகள் கருகிச் சாகும நிலை ஏற்பட்டிருக்கும்.

டிரான்ஸ்போமரும் 8 மின்கம்பங்களும் சரிந்து விழுந்ததற்கு மின்சார வாரியம் மற்றும் மாநகராட்சியின் அலட்சியமே காரணமென்று கூறப்படுகறது. அலட்சியம் காரணமாக அவற்றின் அடிப்பாகததில் துருப்பிடித்திருந்ததால் சூறாவளிககுத் தாக்குப் பிடிக்க முடியாமல் அவை விழுந்துவிட்டன. (து)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 21

பி.ஜே.ராஜய்யா.

## மந்திரிகள் கடத்தல்!

"இரண்டு மந்திரிகள் கடத்தப் பட்டார்கள்" என்ற திடுக்கிடும் தகவலுடன் தான் அன்றைய பொழுது விடிந்தது சதாமுக்கு.

கடத்தப்பட்டவர்களில் ஒருவர் இராணுவ அமைச்சர் ஹமீது சாகிப். இன்னொருவர் உள்துறை அமைச்சர் சான்காய்தன்.

இருவர் வீடுகளுக்கும் அதிகாலையில் தனித்தனியே வந்து இரண்டு கோஷ்டிகள் அவர்களைத் துப்பாக்கியைக்காட்டி மிரட்டி கடத்திக்கொண்டு போயிருக்கிறார்கள்.



பெண் கல்விக்கு ஊக்கமளிக்கும் சதாம்

கடத்தியவர்கள் யார் என்று தெரியவில்லை. கடத்தப்பட்டவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்றும் தெரியவில்லை.

உள்நாட்டு பாதுகாப்பு இலாகாவை நிர்வகித்துவரும் துணை ஜனாதிபதி சதாம் இத்தகவலைக் கேட்டு முதலில் அதிர்ந்தார். பிறகு திகைத்தார்.

கடத்தப்பட்ட இரண்டு மந்திரிகளும் முக்கிய இலாகாக்களைக் கவனிப்பவர்கள். அவர்கள் கடத்தப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது கடத்தல்காரர்களின் நோக்கம் என்ன என்பது புரிந்தது. ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் அவர்கள் நோக்கம் சந்தேகமில்லை.

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு இனி இடம்கொடுத்துவிடக்கூடாது என்று உளவுத்துறையை இருபத்திநாலு மணி நேரமும் உஷார் நிலையில் வைத்திருந்தார் சதாம். அப்படியிருந்தும் அவரது உளவுத்துறையினர் மோப்பம்பிடிக்க முடியாத தூரத்தில் சதிகாரக்கும்பல் இருந்திருக்கிறது.

யார் அந்த சதிகாரன்?

ஆட்சியைக் கவிழ்க்க யார் முயன்றாலும், இராணுவத்தின் ஒரு பிரிவு ஆதரவுகூட இல்லாமல் அதைச் செய்ய துணிவு வராது. ஈராக் அரசியல் ராசி அப்படி. இப்போது இராணுவ உயர் அதிகாரி எவனோ எட்டப்பனாகியிருக்கிறான். யார் அந்த எட்டப்பன்?

விசாரிப்பதற்காக உள்நாட்டு பாதுகாப்புப்படை டைரக்டர் ஜெனரல் நதீம் ஜாருக்கு சதாம் போன் செய்தார்.

நதீம் வீட்டில் இல்லை. அவர் வந்தவுடன் எனக்கு போன் பண்ணச் சொல்லுங்கள் என்று கூறி டெலிபோனை வைத்துவிட்டு தனக்கு விசுவாசமான குடியரசு காவல் படையை உஷார்ப்படுத்தும் உத்தரவை அனுப்பினார்.

திடீரென்று அவர் மூளையில் பொறிதட்டியது...

ஜனாதிபதி பக்கர் ஊரில் இல்லை. கிழக்கு ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கிறார். 1973 ஜூன் 30ஆம் திகதியாகிய இன்று பிற்பகலில்தான் அவர் விசேட விமானம் மூலம் பாக்தாத் திரும்புகிறார். அவர் நாடு திரும்புகிற நாளை, ஆட்சிக் கவிழ்ப்புக்குத் தேர்ந்தெடுத்த அயோக்கியர்கள் அவர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கத் திட்டமிட்டிருந்ததால்...?



இந்த சந்தேகம் எழுந்தவுடனே, உஷார் நடவடிக்கையாக வெளிநாட்டிலிருக்கும் பக்கருக்கு ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பினார். அவசர செய்தி பாக்தாத்துக்கு இரண்டு மணிநேரம் தாமதமாக வந்து சேரவும்.

சதாம் சந்தேகப்பட்டது போலவே நடந்துவிட்டது. பக்கர் வந்து சேருவதாக முதலில் குறித்திருந்த நேரத்தில் பாக்தாத் விமான நிலையத்தில் பயங்கர வெடிகுண்டு வெடித்தது - அந்நேரம் பக்கர் வந்து இறங்கியிருந்தால் பலியாகியிருப்பார்.

பக்கரை கொல்ல சதிகாரக் கும்பல் போட்டிருந்த திட்டம் இவ்விதம் முறியடிக்கப் பட்டது.

திட்டம் தோற்ற பயத்தில் அந்தக் கும்பல் ஈரான் எல்லைப்பகுதிக்குத் தப்பி ஓடியது. அப்போதுதான் கும்பலின் தலைவன் யார் என்று தெரிந்தது.

ஜெனரல் நதீம்ஜார் (உள்நாட்டு பாதுகாப்புப்படை டைரக்டர்) மறுமலர்ச்சிக் கட்சியைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரி சதாமின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அவரைத்தான் சி.ஐ.ஏ பதவி ஆசைகாட்டி தூண்டிவிட்டு இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறக்கிவிட்டிருந்தது. ஆபத்தின்றி தன் காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்ற நினைப்பில் முன்னெச்சரிக்கையாக நதீம் இரண்டு அமைச்சர்களை பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறார்.

விவரத்தை தெரிந்து கொண்டவுடன், சதாம் ஆத்திரமடைந்தார். "துரோகி நதீம் நீ இந்த உலகத்துல எந்த மூலைக்கு ஓடி ஒளிந்தாலும் உன்னை விடமாட்டேன்" என்று வெகுண்டெழுந்தார்.

நதீம் கும்பலைப் பிடிக்க அமைக்கப்பட்ட அதிரடிப்படைக்கு தானே தலைமை ஏற்று ஈராக் ஈரான் எல்லைப் பகுதிக்கு விரைந்தார். நதீம் கும்பலை சுற்றிவளைத்தார். இரு தரப்புக்கும் கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

"நீ தப்ப முடியாது நதீம். பேசாம சரணடைந்துவிடு" என்று வயர்லெஸில் சதாம் எச்சரித்தார். "வந்த வழியே திரும்பிப் போ சதாம் நான் சரணடையமாட்டேன். நெருங்கி வராதே. மீறி வந்தா நான் பிடிச்சு வச்சிருக்கிற மந்திரிகளைச் சுட்டுக்கொன்னுடுவேன்" என்று மிரட்டினான் நதீம். மிரட்டலைப்பொருட்படுத்தாமல் சதாம் அதிரடிப்படையுடன் முன்னேறினார். அதைத் தடுக்கவும் சதாமை எச்சரிக்கவும் நதீம் தன் பிடியிலிருந்த இராணுவ மந்திரி ஹமீது சாகிப்பை சுட்டுக்கொன்று சடலத்தை தூக்கி எறிந்தார்.

அவ்வளவுதான்... ஆவேசமான தாக்குதலில் இறங்கிய சதாம் முழுமூச்சுடன் முன்னேறி நதீம் கும்பலை அப்படியே மடக்கிப் பிடித்தார்.

ஒருவார விசாரணைக்குப்பின் நதீமும் அவரை ஆதரித்த பதின்மூன்று இராணுவ அதிகாரிகளும் தூக்கிலிடப்பட்டார்கள். நதீமை ஒழிக்க சதாமே களத்தில் இறங்கியது மற்ற இராணுவ அதிகாரிகளுக்கு அச்சத்தை கொடுத்தது. ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் எனக்கு கனவில்கூட வரக்கூடாது. கடவுளே என்று அவர்கள் பிரார்த்தித்துக்கொண்டார்கள்.

சி.ஐ.ஏ. உளவாளிகள் சோர்வடைந்துவிடவில்லை. அடுத்த முயற்சியில் இறங்கினார்கள்.

(தொடரும்)

# மரண தண்டனை

(கொழும்பு)

இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில நடைபெற்ற படையினருடனான சந்திப்பின் பின்னர் ஜனாதிபதியிடம் இது தொடர்பில் பொலிஸார் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, ஒருவரின் மரணத்திற்காக தான் கையொப்பம் இடப்போவதில்லை. இந்நிலையில் தனது பொறுப்பை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் அளிக்கப்போவதில்லையென்றும் தெரிவித்துள்ளார். (அ-8)

# ஹஜ் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

சவூதி அரேபிய அரசாங்கம் இலங்கைககு ஒதுக்கும் ஹஜ் யாத்திரிகர்களின் எண்ணிக்கையை 6 ஆயிரத்திலிருந்து 7ஆயிரத்து 500 ஆக அதிகரித்துள்ளது. மேல் மாகாண ஆளுநர் அலவிமௌலானாவின் வேணடுகோளுக்கு இணங்க இவ் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை ஹஜ் பிரயாண இயக்குநர் சங்கத்தின் 15 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 82 ஹஜ் பிரயாண இயக்குநர்களும் மற்றும் அகில இலங்கை ஹஜ் இயக்குநர்கள் சங்கமும சிறந்த மத சேவையை ஆற்றிவருகின்றனர் என்றும்,

ஹஜ் யாத்திரை இலங்கையை மத்திய கிழக்கு நாடுகளுடனும் மேலும் உலகில் உள்ள முஸ்லிம் சகோதரர்களுடனும இணைந்துகொள்வதற்கும் பெரிதும் உதவுகின்றது என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்நிகழ்வில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா சவூதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் ஸாதிக் முஸ்லிம் சமயக் கலாசார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் மீரா முஹயதீன் உட்பட மற்றும பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (அ-2)

# மின் கம்பத்துடன் மோதி மரணம்

(வவுனியா)

வவுனியா கோயிற்குளம் பகுதியில் நேற்று முன்தினமிரவு மின் கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற நபர் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து நேசபுரம் நோக்கி இவர் வேகமாகச் சென்றுகொண்டிருநதபோது கோயிற்குளம் பகுதியில் மின்கம்பத்துடன் மோதுணடு அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். வவுனியா நேசபுரம் பகுதியை சேர்ந்த எஸ். புவனேந்திரன் என்பவரே உயிரிழந்தவராவார். இவ் விபத்துச் சம்பவம் குறித்து பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-8)

# பஸ் இறக்குமதி

(கொழும்பு)

போக்குவரத்து சேவையை பயணிகளுக்கு மேலும் சிறந்த முறையில் வழங்குவதற்காக வெளிநாடுகளிலிருந்து ஆயிரம் புதிய பஸ் வண்டிகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஆயிரம் புதிய பஸ் வண்டிகளும் இலங்கை போக்குவரத்துச் சபையின ஊடாக கிராமங்களுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய பஸ் வண்டிகள் விரைவில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைநததும் நாட்டிலுள்ள சகல கொத்தணி பஸ் நிறுவனங்களைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்து சபை பஸ் டிப்போக்குகளுக்கு விநியோகிக்கப்படும் என நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.(அ-9)

# இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு இந்த ஆண்டில் வருகை தந்த உல்லாசப் பயணிகளில் இந்திய உல்லாசப் பயணிகளே அதிகளவில் இருப்பதாக இந்திய சுற்றுலாத்துறை அமைச்சர் ரேணு ஹச்சவுட் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற சார்க் நாடுகளின் சுற்றுலாத்துறை அமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டு முதல் 6 மாத காலப்பகுதியினுள் இந்தியாவிலிருந்து 54 ஆயிரத்து 618 உல்லாசப் பயணிகள் இலங்கை வந்துள்ள அதேவேளை, பிரிட்டனில் இருந்து 39 ஆயிரத்து 303 பேர் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)

# பல்கலைக்கழக அனுமதியில் மாற்றமில்லை

## மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்துள்ள தகுதியான மாணவர்களை இவ்வருட இறுதிக்குள் பல்கலைக் கழகங்களில் சேர்த் துக்கொள்ளும் திட்டத்தில் மாற்றம் இல்லையென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்று வந்த பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக பல்கலைக் கழக அனுமதி இவ்வருட இறுதியில் நடைபெறமாட்டாது என அறிவிககப்பட்டது.

க.பொ.த. (உ/த) பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் வெளியிடப்படவிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

முன்னர் திட்டமிட்டபடி இவ்வருடத்திற்கான மாணவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதி அனுமதிக்கப்படவிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-9)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

வலம்புரி

# சட்டத்தைப் பாதுகாக்கும் அமைப்புக்களின் பலவீனம்

இலங்கையைப் பொறுத்தவரை ஓர் நிதானமான அரசியலமைப்பு இன்மையால் நாடு பல்வேறு வழிகளிலும் குழப்பம் கண்டுள்ளது.

ஜனநாயக நாடு என்பது பெயரளவில் மட்டும் இருந்தால் போதுமானதல்ல. அங்கு ஜனநாயகப் பண்புகளும் இருக்கவேண்டும். இந்தப் பண்புகளை அரசியல்வாதிகள் பாதுகாப்பார்கள் என எண்ணுவது மிகப்பெரும் தவறாகும்.

அரசியல்வாதிகள் தனது நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவார்களே அல்லாமல், அவர்களுக்கு நாட்டில் ஜனநாயகம் நிலைக்கவேண்டுமென்ற சிந்தனை இம்மியும் இருக்கமாட்டாது. அப்படியானால் ஜனநாயகப் பண்புகளைப் பாதுகாக்கும் பொறுப்பு யாருடையது என்ற கேள்வி எழுகின்றது.

பல்லின மக்கள் வாழுகின்ற ஒருநாட்டில் அமைதி -சமாதானம் - சுதந்திரம் - சமத் துவம் என்பன முழுஅளவில் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் இங்கு நீதிபரிபாலன அமைப்புக்கள் சிறப்பாக செயலாற்றவேண்டும்.

பொலிஸ் நீதிமன்றம், தேர்தல் திணைக்களம், ஊழல் ஒழிப்புத் திணைக்களம் என்பன செம்மையாக - பூரண அதிகாரத்துடன் -தலையீடுகள் இன்றி இயங்குமாயின் மேற்கூறப்பட்ட ஜனநாயகப் பண்புகளை நாடு கட்டிக் காக்கமுடியும்.

உலகில் உள்ள உயர்ந்த ஜனநாயகப் பின்னணியுடைய நாடுகளை எடுத்து நோக்கினால், அங்கு அரசியல்வாதிகளின் அத்துமீறல்களை சட்டரீதியாக ஜனநாயக அமைப்புகள் தடுத்துவிடுகின்றன.

இந்த நிலைமை இலங்கையில் இல்லாமல் போனமையே, நாட்டில் தீராத இனயுத்தம் ஏற்படக் காரணம் எனலாம். இலங்கையைப் பொறுத்தவரை ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய நீதி பரிபாலன அமைப்புகள் அரசியல்வாதிக்ளின் கரங்களுக்குள் அகப்பட்டுள்ளன.

பொலிஸ் திணைக்களத்தைப் பொறுத்தவரை அங்கு பெரும்பான்மையினரே அந்தத் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பாளர்களாக உள்ளனர். இதனால் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்ற எண்ணப்பாடு இல்லாமல்போய்விடுகிறது.

சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநிறுத்த வேண்டிய பொலிஸ் இலாகா, தனது பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ளுமாயின் அதன் பிரகாரம் நீதிமன்றங்களின் பணியும் திசைமாறுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அதேநேரம் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அமைப்புக்களில் மிக முக்கியமானதாக இருப்பது தேர்தல் திணைக்களம். நாட்டில் தேர்தல் நடத்தப்படவேண்டிய ஒழுங்குமுறைக்கு அமையத் தேர்தலை நடத்துவது தேர்தல் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

ஆனால் இலங்கையில் உள்ள தேர்தல் திணைக்களம் அடுத்த தேர்தலை எப்போது நடத்துவது என்பதே தெரியாமல் இயங்குகிறது. அவ்வாறாயின் இந்த அமைப்புக்களால் ஜனநாயகப் பண்புகள் எப்படிக் கட்டிக்காக்க முடியும்.

இந்தக் கேள்விக்கு சரியான பதிலைத் தேடுகின்றபோதே இலங்கையும் ஜனநாயக நாடு என்ற வகுதிக்குள் சேர்ந்துகொள்ளும்.

# அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர் தெரிவுக்காக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு இன்று

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சபைக்கு புதிய உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க் கட்சித்தலைவர் ரணில்விக்கிரம சிங்கவிற்கும் இடையில் இன்று நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

அரசியல் அமைப்புச்சபையில் தற்போது வெற்றிடமாகவுளள இடங்களுக்கு 5 உறுப்பினர்களின் பெயர்களை ஜனாதிபதிக்கு சிபார்சுசெய்து அனுப்புவதற்காகவே இவர்கள் சந்தித்துப்பேசவுள்ளனர்.

அரசியல் அமைப்புச்சபையில் வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க் கட்சிததலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்றுக்கொளளுமெ 5 பேர் ஜனாதிபதிக்கு சிபார்சு செய்யப்பட வேண்டும் என்பதால் இன்று இருவரும் நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்திககவுள்ளதாக அரசியல் அமைப்புச் சபையின செயலாளர் தம்பிக்க ஹித்திலக்கொட தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்புச் சபையில், கடந்த மார்ச் மாதத்திலிருந்தே வெற்றிடங்கள் நிலவுகின்றது. இதனால் மேலமுறையீட்டு நீதிமன்றத்திற்கு நீதிபதி ஒருவரைக கூட நியமிப்பது இயலாது. அத்துடன் அரசியல் அமைப்புச் சபையின் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படாது போனால் விரைவில் வெற்றிடம் ஏற்படவுள்ள அரச சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, நிதி ஆணைக் குழு ஆகிய ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதும் தாமதமாகும் என அரசியல் அமைப்புச்சபைக காரியாலயம் தெரிவித்துள்ளது. (அ-9)

# யாழ்.மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுநர் தின நிகழ்வும், பாிசளிப்பு விழாவும் நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு கல்லூரியின் பழைய மாணவனும் வலம்புரி பத்திரிகையின் பிரதம கருத்துரை ஆசிரியருமான ந.விஜயசுந்தரத்தின் தலைமையில் நடைபெறறது.

இநநிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா ரெலிக்கொம நிறுவனத்தின் வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் வி.யோகேந்திரன், திருமதி பிறேமாவதி யோகேந்திரன் தம்பதிகள் கலந்துகொண்டனா.

பிரதம விருந்தினர்களும், சிறப்பு விருந்தினர்களும் மற்றும விருந்தினர்களும் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டனர். மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்புக் கீதம் என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரமபமானது.

நிகழ்வின் தலைவரும், பழைய மாணவனும் வலம்புரி பத்திரிகையின் பிரதம கருத்துரை ஆசிரியருமான ந.விஜயசுந்தரம் தலைமையுரை ஆற்றினார்.

இதையடுத்து பாடசாலை அதிபர் க.இராசதுரை அதிபர் அறிககையை வாசித்தார். தொடர்ந்து பாடசாலை மாணவன பற்குணராஜா உபேந்திரனது ஆங்கிலப் பேச்சும், பாடசாலையின் முன்னாள் நூலகர் மாணிக்கவாசகரது நிறுவுநர் உரையும், தெய்வேந்திரன் தர்சனது தமிழ்ப பேச்சும் இடம்பெற்றன.

இதையடுத்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ரெலிக்கொம் நிறுவனத்தின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரனது பிரதமவிருந்தினர் உரையைத்தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ-19)

# பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறார் ரவிராஜ் எம்.பி

மலையக தமிழ் சகோதரர்களை இழிவுபடுத்திய பிரதியமைச்சர் பதவி விலக வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ தெரிவித்துள்ளார்.தமது சகோதரர்களை இழிவாகப் பேசியபிரதிய மைச்சர் மேர்வின் சில்வா அமைச்சர் பதவியிலிருநதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் விலக வேண்டும.

இவரது செயற்பாட்டைக் கண்டித்து மலையக மக்களின தலைமைகள் எடுக்கும் எத்தகைய போராட்டத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்துள்ளார். சிங்கள மக்களின் ஆதரவைப்பெறாத மேர்வின் சில்வா பின் கதவால் நாடாளுமன்றத்திற்கு சென்றுவிட்டு தமது சகோதரர்கள் மீது வசைபாடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதனால் பிரதியமைச்சர் சகோதர மக்களை இழிவுபடுததும் வகையில் பேசியமை கீழ்த்தரமான செயலாகும் என்று தெரிவித்த அவர் மேர்வின் சில்வா வணங்கும் புத்தபெருமான்கூட இந்தியாவில் பிறந்தார். இதனை அவர் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதியமைச்சர் இவ்வாறு வசைபாடிய பின்னரும் மலையக தலைமைகளின் விடயத்தில் மௌனம் சாதிப்பதானது தமக்குக்கவலை அளிப்பதாகவும் குறிபபிட்டுள்ளார்.

இதேவேளை, மேர்வின் சில்வாவின் மகனுக்கு பொலிஸ பிணை வழங்கியமை எந்தச் சட்டத்தின்கீழ் என்பதை பொலிஸ்மா அதிபர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஆடு, மாடு என்பவற்றைக் களவெடுப்பவர்களுக்கு இருவாரம விளக்கமறியல் வழங்கப்படுகின்றது. இந்த நிலையில் பொலிஸ் மீது தாக்குதல் நடத்தியவருக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது.

எந்தச் சட்டத்தின் கீழ் பொலிஸ்மா அதிபர் இதனை வழங்கினார் என்பதனை விபரிக்க வேண்டும். இந்த நிலையில் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் செயலுக்கு ஜனாதிபதியோ பிரதமரோ மன்னிப்புக்கோரவில்லை.

இந்தியாவில் ரயில்விபத்து நடநதாலே குறித்த அமைச்சர் பதவி விலகுவது வழக்கம். பிரதியமைச்சர் மோவின் சில்வாவோ ஒரு சமூகத்தை இழிவுபடுத்தியுள்ளாா. இதனால் அவர் பதவி விலக வேண்டும் என்று நாடாளுமனற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார். (அ-9)



இலங்கை வங்கியின்66 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். பிராந்திய மேற்தரக்கிளையிலும் ஸ்ரான்லி வீதி கிளையிலும் நடைபெற்றன.

இலங்கையின் யாழ்.பிராந்திய மேற்தரக் கிளையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பிராந்திய மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் விக்னராஜா உரையாற்றுவதையும், விருந்தினர்களாகக் கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வர், முன்னாள் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு, யாழ்.பிராந்திய மேற்தரக் களையின் செயற்பாட்டு முகாமையாளர் அருமநாயகம், வணபிதா பொன்சியஸ அடிகள், யாழ். பல்கலைககழக முன்னாள் துணை வேந்தர் பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் மேடையில் இருப்பதையும நிகழ்வல் கலந்து கொண்டவர்களையும படங்களில் காணலாம்.

(படங்கள்: ஞா.ஐங்கரன்)

## திகைசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

உங்கள் உடலுக்குப் பின்னால் எவ்வளவு சக்தி, எத்தனை ஆற்றல்கள், வேகங்கள் எல்லாம் மறைந்துள்ளன. என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் ஆற்றலின் மிகச் சிறிய பகுதியையே நீங்கள் அறிந்துள்ளீர்கள். எல்லையற்ற ஆற்றலும் நல்வாழ்த்துக்களும் உங்களுள் கடல் போலுள்ளது.

சுவாமி விவேகானந்தர்

# தற்கொலை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார பின்னடைவு காரணமாக தற்கொலைச்சம்பவங்கள் பெருமளவில் அதிகரித்துவருவதாக பொலிஸ் புள்ளிவிபர பிரிவு தெரிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டு முதல் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கும் இந்தப் பிரிவு கடந்த வருடம் 4ஆயிரத்து 876 பேர் தற்கொலை செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

ஹம்பகா, இரத்தினபுரி, கேகாலை, அனுராதபுரம் பிரதேசங்களிலேயே அதிக தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகத தெரிவிக்கப்படுகின்றது. (அ-9)

# வர்ணப்படத்துடனான அ.அட்டை இம்மாதம் முதல் விநியோகம்

(கொழும்பு)

இம் மாதம் முதல் கறுப்பு- வெள்ளை அடயாள அட்டை விநியோகிப்பதனை முற்றாக இடை நிறுத்திவிடத் தீர்மானித்திருப்பதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு கறுப்பு வெள்ளை அடையாள அட்டை வழங்குவதற்கு பதிலாக வர்ண ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை வழங்க திணைக்களம் தீர்மானித்திருப்பதாக அதன் ஆணையாளர் எச்.கே.கீதசேன தெரிவித்தார்.

ஜூலை மாதம் விண்ணபித்தவர்களுக்கு கறுப்பு -வெள்ளை நிற அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் இனிமேல் விண்ணப்பிப்பவர்கள் வர்ண ஒளிப்படத்துடனான அடையாள அட்டைக்கான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே வர்ண ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலாளர் காரியாலயங்களுக்கும் கிராமசேவகர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மக்களுக்குத்தேவையான ஆலோசனைகளை வழங்க பிரதேசசெயலாளர்களின் ஊடாக கிராமசேவகர்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவு திணைக்களம் இதுவரை 200 வர்ண ஒளிப்பட அடையாள அட்டைகளை வழங்கியுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் நாள் ஒன்றுக்கு 1000 வர்ண அடையாள அட்டைகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச)

# ஆயுதப் போராட்டம் மூலம் சமாதானத்தை எட்ட முடியாது

## லக்ஸ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு பற்றிய கேள்விக்கு பதில் கூறுவதானது, புலிகள் முற்றாகச் செயல் இழந்து போகாதவரை சாத்தியமற்றது என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சுயசரிதை நுல்வெளியீட்டு விழாவில் பேசும் போது அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், முன்னர் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இடம்பெற்ற பேச்சுக்களுக்கு சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டியதில்லை.

அயர்லாந்தில் ஐ.ஆர்.ஏ.போராளிகள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு முழுவதுமாக ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ளனர். இனிமேலும் பயன்படுத்தாது ஆயுதங்களை கீழேபோடுவது அவசியம்

ஐ.ஆர்.ஏ.கவுன்சில் தற்போது முழுவதுமாக சமாதானத்திற்கு ஆதரவளிக்கின்றது.

மேலும் அயர்லாந்துடன் ஒப்பிடும் போது இலங்கையின் சமாதான செயற்பாட்டில் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் எடுத்துக் கூறினார்.

இதில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் உண்மை என்னவெனில் ஆயுதப்போராட்டங்கள் ஒருபோதும் போரினால் தீர்க்கப்படமுடியாது. பேச்சுக்கள் மூலமே தீர்வுகாண வேண்டும் என அவர் கூறினார். (ச-6)

# சேதுசமுத்திரத் திட்டப் பாதிப்புக் குறித்து இலங்கை, இந்திய நிபுணர்கள் ஆராய்வு

சேது சமுத்திரத் திட்டம் காரணமாக இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து ஆராயும் முகமாக இந்திய, இலங்கை நிபுணர்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

சேதுசமுத்திரத்திட்டம் அமுல்படுத்தப்படுவதன்மூலம் இலங்கையின் மேற்கு, வடக்குப்பிராந்தியத்தின் சுற்றாடல்கள் பாதிக்கப்படலாம் என்பதோடு கொழும்பு துறைமுகத்திற்கான கப்பல் நடவடிக்கைகளுக்கும் குந்தகம் ஏற்படுமென இலங்கையைச் சேர்ந்த பல அமைப்புக்கள் முன்னர் விசனம் தெரிவித்திருந்தன.

இதனையடுத்து இருநாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

இப்பேச்சுவார்த்தையில் நாரா நிறுவனம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை கடற்படை உட்பட பலநிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நேற்றைய பேச்சுவார்த்தையில் இலங்கைக்கு ஏற்படுகின்ற் பாதிப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. சுற்றாடல் மற்றும் மீனவப்பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாக முதலாம் கட்ட நிபுணர்கள் கலந்துகொண்ட பேச்சுவார்த்தை ஜனவாரிமாதம் இடம்பெற்றது. அத்துடன் சேது சமுத்திரத்திட்டத்தால் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகக் கூறிமன்னார் மீனவர்கள் அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

# புகையிரதக் கட்டணங்கள் 50 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

ரயில் கட்டணங்கள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஜனவரி மாதம் ரயில் க்ட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட பின்னர் புதிய அதிகரிப்பு நேற்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ரயில் கட்டண அதிகரிப்பு 100க்கு 50முதல் 70வீதம் வரை அமைந்துள்ளது இதன்படி நான்கு ரூபாவாக இருந்த ரயில் கட்டணம் 5ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏற்றவகையில் ரயில் பருவகாலச் சீட்டுக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய திருத்தத்தின்படி இதுவரை நிலவிவந்த கட்டண வேறுபாடுகள் நீக்கப்படுமென்று ரயில்வேபொது முகாமையாளர் பிறியால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 50 கிலோமீற்றர் தூரம்வரை பயணிக்கும் பயணி ஒருவரிடம் ஒருகிலோ மீற்றர் ஒன்றிற்கு 53 சதமும் 50முதல் 100 கிலோமீற்றர் வரை பயணிக்கும் பயணி ஒருவரிடம் இருந்து 49 சதமும் 100முதல் 200கிலோமீற்றர் பயணிக்கும் பயணி ஒருவரிடம் இருந்து 48 சதமும் 200 முதல் 300 கிலோமீற்றர் தூரம்வரை பயணிக்கும் ஒருவரிடம் இருந்து 46 சதமும் கட்டணமாக அறவிடப்படுகின்றது. (அ-9)

## அரசின் புதிய...

போக்குவரத்திற்குத் தேவையான அளவு பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதி இராணுவத்தரப்பபிற்கு உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் அவசர சிகிச்சைக்காக திருகோணமலையில் இருந்து கிளிநொச்சிக்குச் சென்ற புலிகளின் திருமலைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கு அதிஉச்சபட்ச பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன் அவர் பயணம் செய்த வாகனத்தில் படையினரும் பயணம் செய்ததுடன் நாட்டின் மிக முக்கிய தலைவர் ஒருவர் பயணம் செய்யும் போது வழங்கப்படும் பாதுகாப்புப் போன்று பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதன் மூலம் புலிகள் வற்புறுத்திய கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே புலிகளின் பதில் கடந்த சனிக்கிழமை அரசிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக புலிகளின் ஊடகப்பேச்சாளர் தயாமாஸ்ரர் தெரிவித்ததாக இணையத்தளம் ஒன்று வெளியிட்டது புலிகளின் இந்தப்பதில் குறித்து எதுவும் தெரிவிக் கப்படாதபோதிலும் அரசின் மேலதிக யோசனையில் தெரிவிக்கப்பட்ட முக்கியவிடயங்களை புலிகள் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறப்படு கிறது. (ச)

## தமிழ்த் தேசியத்தை...

உடைகளிலும், பெண்கள் சிவப்பு, மஞ்சள் உடைகளிலும் வருகைதருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல பிரதேசங்களில் இருந்தும் பொதுமக்கள், பொதுஅமைப்புக்கள், கல்விமான்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பலதரப்பினரும் கலந்து கொண்டு தமது உணர்வுகளை சர்வதேசத்திற்கு எடுத்துவிரக்கவுள்ளனர். (ச)






# குற்றவாளிகளை நாடு கடத்த இந்திய உயர் நீதிமன்றம் அனுமதி

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் தொடர்பிருப்பதாக இந்திய அதிகாரிகளினால் சந்தேகிக்கப்பட்ட இலங்கை தமிழ் அகதிகள் இருவர் இந்தியாவை விட்டு வெளியேறலாம் என்று இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை தமிழ் அகதிகளான வசந்தன், லிங்கன் ஆகிய இருவரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு தடை விதிக்கமுடியாது என இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து இந்திய மத்திய புலனாய்வுத்துறை, இந்திய உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது. மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே இந்திய உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டமைக்கு அமைய அவர்களை இலங்கைக்கு அனுப்பிவைக்க முடியுமென்று தனது தீர்ப்பில் தெரிவித் துள்ளது. (ச-8)

# சுனாமி பேரலையால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்குப் புதிய பாதுகாவலர் பதிவு

(கொழும்பு)

சுனாமிப்பேரலையினால் பெற்றோரை இழந்த சிறுவர்களின் புதிய பாதுகாவலர்களை பதிவு செய்வதற்கு இதுவரை சுமார் 100 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

யூன் மாதம் அமுல்படுத்தப்பட்ட சுனாமி விசேட ஒழுங்கமைப்பு சட்டமூலத்திற்கு அமைய இந்தப் பதிவுகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக இந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதற்கமைய பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக புதிய பாதுகாவலர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு யூ லை மாதம் 13ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை மனிதாபிமான அடிப்படையில் ஏற்றுக்கொண்டதாக நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்காக 200 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற போதிலும் அவற்றின் 100 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பெற்றோரில் ஒருவர் உள்ள சிறுவர்கள் சார்பாகவும் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-9)

# பொலிஸ் நிலையத்திற்கு அருகில் சக்திவாய்ந்த வெடிகுண்டு மீட்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பொலிஸ்நிலையத்திற்கு அருகில் சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்று நேற்று கண்டு பிடிக்கப்பட்டது.

பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள தேநீர் கடைக்குச் செல்லும் பொலிஸாரை இலக்கு வைத்து இக்குண்டு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குண்டு செயலிழக்கும் பிரிவினர் குண்டை செயலிழக்கச் செய்தனர். (ச)

# முன்பள்ளிக் குடும்ப விளையாட்டு விழா

வடமராட்சி வலயத்தின் பருத்தித்துறை பிரதேச புலோலி 2 முன்பள்ளி குடும்பமட்ட விளையாட்டு விழா புற்றளை விளையாட்டு மைதானத்தில் புலோலி குடும்ப முன்பள்ளித்தலைவர் எம்.நவரட்ணராஜா தலைமையில் நாளை நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவிலே பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆலோசகரும் பருத்தித்துறை பிரதேசசபை பிரமதம நூலகருமான எஸ்.திருச்செல்வம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

யாழ்.மவாட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவநேசன் வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் தென்புலோலி புற்றளைமகா வித்தியாலய அதிபர் எம்.அனந்தீஸ்வரன் கிராம உத்தியோகத்தர் எஸ்.ஏ.ஞானச்சந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச)

## பிரதியமைச்சர்...

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரைத் தாக்கியதையடுத்து மேர்வின் சில்வா மேற்கொண்ட சில செயல்களால் நாட்டு மக்கள் பலரினதும் ஊடகங்களினதும் பார்வை மேர்வின் சில்வா மீது திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

## போர்நிறுத்த...

என்பன இணைந்து இவ்வழக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மனுக்கள் பரிசீலனை செய்த பின்னரே இவ் அனுமதியை வழங்கியுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. தமிழீழதேசியத்தலைவர் வே.பிரபாகரன் ஆகியோரை முன்னர் தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இதேவேளை இந்த வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் 23 ம் திகதி எடுக்கப்படும் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை பிரதிவாதிகளாக கருதப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளுடன் அரசு கைச்சாத்திட்டுள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கை அரசியல் அமைப்புக்கு முரணானது என்றும் அதனை ரத்துச்செய்வதற்கான உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் மனுதாரர் மனுவில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-8)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.